உ





# ஞானச்சுடர்

## மாசி மலர் 2001




வெளியீடு

**சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை**



உ

சிவமயம்

## குறள் வழி

'அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்
மக்கட்பண்(பு) இல்லா தவர்.' [போல்வர்

பொருள் :

மக்களுக்குரிய நல்ல குணங்கள் இல்லா தவர் அரம்போல் அறிவாலும் செயலாலும் கூர்மை உடையராயினும் மரம் போன்றவர் களாவர்.



# நற்சிந்தனை

## ஆசான் வாசகம்

முழுவது முண்மை யெனமுன் சொன்ன
பழுதில் வாக்கியம் பரகதி காட்டும்
தொழுது வணங்கிச் சுகமாய் வாழுதி
அப்படி யுள்ளதென் றாசான் சொன்ன
ஒப்பில் வாக்குநல் லுணர்வை யளிக்குங்
கைப்போது தூவி எப்போதும் வாழுதி
ஆரறிவா ரென்ற ஆசான் வாசகம்
பேரறி வைத்தரும் பேணி வாழுதி
நாமறியோ மென்ற நலந்திகழ் வாக்குச்
சேம மளித்துச் சிவகதி யாக்குமே
தாமத மின்றிச் சார்ந்து வாழுதி
முடிந்த முடிபென்னும் முனிவன் வாக்கு
படிந்த மனத்தில் பரகதி காட்டும்
விடிந்தும் மலரிட்டு விரும்பி வாழுதி
ஆசான் மலரடி மறவா அடியவன்
பேசுஞ் செந்தமிழ் பிறவிநீக் கும்மே

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 38

2001 மாசி

## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| அறநெறி கூறும் திருக்குறள் | 1 - 3 |
| நம்பிக்கைகள் | 4 - 6 |
| சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும் | 7 - 9 |
| வாழ இது வழி | - 10 |
| ஏறுமயில் ஏறி விளையாடுபவன் | 11 - 13 |
| தலைப்பட்டாள் நங்கை ... ... | 14 - 16 |
| பிட்சாடன மூர்த்தி பிட்சை ஏற்றார் | 17 - 19 |
| மானுடத்தை மேன்மைப்படுத்தும்...... | 20 - 23 |
| சந்நிதியான் | 24 - 27 |
| ஸ்ரீ முருக மந்திரம் | 28 - 30 |
| ஸ்ரீ செல்வச்சந்நிதிக்கந்தன் திருத்தல புராணம் | - 31 |
| ஞானச்சுடர் வாசகர் போட்டி விடைகள் | - 32 |
| பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் ...... மாணவர் பக்கம் | 33 - 34 |
| பதியாகிய சிவன் ஒரு நோக்கு | 35 - 36 |


அன்பளிப்பு : மலர் ஒன்று 30/- ரூபா

வருடச்சந்தா தபால் செலவுடன் 385/- ரூபா.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர்

அச்சுப் பதிப்பு : அச்சகம் - சந்நிதியான் ஆச்சிரமம்

தொண்டைமானாறு.

# "ஞானச்சுடர்"
## தை மாத வெளியீடு

வெளியீட்டுரை :-

மலருக்கான வெளியீட்டுரையை பேரவையின் உபசெயலாளரும் பண்டிதருமான கவிமணி க. முத்துவேலு அவர்கள் மேற்கொண்டார்கள்.

ஞானச்சுடர் ஒரு வளர்ந்துவரும் குழந்தையாக 4 வது வயதில் காலடி எடுத்துவைப்பதன் வரலாற்றைச் சுட்டிக்காட்டிய பண்டிதர் அவர்கள் படிப்படியாக இதன் தரம் அதிகரித்துவருவதையும் எடுத்துக் கூறினார்கள்.

ஞானச்சுடரில் பிரசுரிக்கப்படுகின்ற கட்டுரைகளைப் பார்வையிடுதல் தொடர்பான பணிகளைத் தான் மேற்கொண்டு வருவதைக் குறிப்பிட்டு இதனால் பல புதிய கருத்துக்களை, புதிய விடயங்களை கற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பு தனக்கு ஏற்பட்டிருப்பது பற்றியும் சபையினருக்கு எடுத்துக்கூறினார்கள்.

மதிப்பீட்டுரை :-

யா / ஹாட்லிக்கல்லூரி ஆசிரியர் திரு. ஆ. சிவநாதன் அவர்கள் மலருக்கான மதிப்பீட்டுரையை வழங்கினார்கள். ஆசிரியர் தமது ஆரம்ப உரையில் தகுதியும், திறமையும் பெற்று 4 வது ஆண்டில் மலர் காலடி வைப்பது தொடர்பாக தனது உளப்பூர்வமான வாழ்த்துக்களை ஞானச்சுடரால் பயனடைவோர் சார்பில் சபையினர் மத்தியில் தெரிவித்தார்கள்.

இன்று ஞானச்சுடர் உயர்நிலையில் வெளிவந்துகொண்டிருக்கிறது ஆகவே இந்த மலர் தொடர்பான மதிப்பீட்டுரையில் ஒரு மேலோட்டமான ஒரு தூண்டுதல் செய்வதே தனது கடமையாக இருக்கின்றது என்பதை சபையினருக்கு எடுத்துக்கூறினார்.

தாங்கள் மட்டும் வாழக்கூடாது மற்றவர்களையும் வாழவைக்க வேண்டும் என்று அன்றுதொடக்கம் இன்றுவரை கூறப்பட்டு வந்தாலும் கலியுகத்தில் அந்தத் தன்மை நலிவடைந்தே வந்துள்ளது. ஆனால் ஞானச்சுடர் மற்றவர்களை வாழவைப்பதையே குறிக்கோளாகக் கொண்டு வெளிவந்துகொண்டிருக்கிறது என்பதை ஆசிரியர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

இறுதியாக மலரில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளின் சிறப்பை அடியார்களுக்கு இரத்தினச்சுருக்கமாக எடுத்துக்கூறினார்கள்.

# சுடர் தரும் தகவல்

அறிவு கூடியவர்கள் தாம் நன்மையடைவதுடன் சமூகத்திற்கும் பயனைப் பெற்றுக் கொடுக்கின்றனர். இந்த வகையில் ஒரு நாட்டில் கல்வியறிவுள்ளவர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும் பொழுது அந் நாட்டில் வினைத்திறனும், விளைதிறனும் அதிகரித்து இறுதியில் மொத்தத்தேசிய உற்பத்தியும் அதிகரிக்கின்றது.

பொருளாதார ரீதியாக ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அறிவுள்ளவர்கள் பங்களிப்பு இவ்வாறு சாதகமான கண்ணோட்டத்தில் நோக்கப்படுகின்ற அதே வேளை அறிவுள்ளவர்கள் உண்மைபேசுகின்றனரா? ஒழுக்கம் உள்ளவர்களாக இருக்கின்றனரா? என்ற வாதமும் முன்வைக்கப்படுகிறது. அறிவுகூடியவர்கள் தான் கூடுதலாகப் பொய் சொல்லுகின்றனர் ஒழுக்கச்சீர்கேட்டில் ஈடுபடுகின்றனர் என்று ஒரு பகுதியினர் நம்புவதே இந்த வாதம் சமூகத்தில் எழுப்பப்படுவதற்கான காரணமாகும்.

அறிவு கூடியவர்கள் கூடுதலாகப் பொய் சொல்லுகிறார்களா என்று சிந்திக்கும்பொழுது தர்க்கவியல்ரீதியாக இதனை ஏற்றுக் கொள்ளமுடியாது. அவ்வாறு அறிவு கூடியவர்கள் கூடுதலாகப் பொய் சொல்கிறார்கள் என்றால் அது அந்த அறிவைப் பெற்றவர்களுடைய குறைபாடே தவிர அறிவினுடைய குறைபாடாக ஒரு போதும் இருக்கமுடியாது.

உண்மை, ஒழுக்கம், தர்மம், நீதி போன்ற பண்புகள் அறிவுள்ளவர்களிடத்திலே குறைகின்றதென்றால் அதற்கு ஆத்மீகம்சார்ந்த நம்பிக்கைகளும், நாட்டமும் சமூகத்தில் குறைந்துபோவதே காரணமாகும்.

ஆகவே கல்விஅறிவு குறைந்த பாமர மக்களாக இருந்தாலும் சரி அறிவாற்றல் நிறைந்த புத்திஜீவிகளாக இருந்தாலும்சரி சமூகத்தில் அவர்கள் உண்மையானவர்களாகவும் ஒழுக்கமுள்ளவர்களாகவும் வாழ்வதற்கு அடிப்படையாக அமைவது சமூகத்தில் ஆத்மீக நம்பிக்கைகள் எந்தளவுக்குக் கடைப்பிடிக்கப்படுகின்றன என்பதைப் பொறுத்ததாகும்.

எனவே மனித சமூகத்தில் நிம்மதியும், திருப்தியான வாழ்க்கையும் நிலவவேண்டுமானால் ஏனைய எல்லாவற்றையும்விட ஆத்மீகம் சார்ந்த மெய்யான சிந்தனைத்தெளிவே எமக்கு முதல் முக்கிய தேவையாக உள்ளது.

ஓம் முருகா

# ஞானச்சுடரே! வாழி வாழி!

அன்பது அவனி சார
அறநெறி வளர நல்ல
அவனருள் பெற்று மக்கள்
அவனியில் அமைதி பொங்க
இன்பமே சூழ வெங்கும்
இருளெலாம் அகன்று ஓட
இன்மொழி வளர்க்கும் ஞானச்
சுடரே ! நீ ! வாழி ! வாழி !

உள்ளொளி வளரா விட்டால்
உலகத்தோர் மாக்களாவார்
அனைத்திலும் வேறு பட்டே
அழிவுசேர் பாதை செல்வார்
நானென்ற அகந்தை நீங்க
நாம் என்ற எண்ண மோங்க
நன்னெறி வசனம் செப்பும்
ஞானச்சுடரே ! வாழி ! வாழி !

ஆன்மீக விளக்க மீந்தே
அகிலத்தின் சுடரே யாகி
நள்ளிருள் கடிந்து மக்கள்
மனத்தினின் நடுவே நின்று
சந்நிதி முருகன் பாதம்
சார்ந்திடும் வழியைக் காட்டி
ஆண்டு நான்கைக் காணும்
ஞானச்சுடரே ! வாழி ! வாழி !

கா. கணேசதாசன் J. P.
ஓய்வுபெற்ற அதிபர், உடுவில்

# மாசி மாத சிறப்புப் பிரதி பெறுவோர்

திரு. பா. இராசேந்திரம் G. S.
( கெருடாவில் தெற்கு )

தலைவர்
( உடுப்பிட்டி ச. ச. நிலையம் )

அதிபர்
( தொண்டைமானாறு வீ. ம. வித்தியாலயம் )

திரு. V. S. P. குமார் ( ஸ்ரீகுமார் )
( உரிமையாளர், கல்பனா ஸ்ரோர்ஸ், அச்சுவேலி )

அதிபர்
( யா / கெருடாவில் இந்து த. க. பாடசாலை )

நிர்வாகி
( ரலன்ற் கல்வி நிறுவனம், கரவெட்டி )

திரு. சு. சிறிஸ்காந்தராசா
( கணித ஆசிரியர், கெருடாவில் இ. த. க. பாடசாலை )

திரு. கா. இராமஜெயம்
( ஆசிரியர், கரணவாய் மத்தி )

திரு. செ. தயானந்தன்
( ஹம்சா, உருக்கு வடிவமைப்பாளர், உடுப்பிட்டி )

திரு. சி. சிவம்
( சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை, நெல்லியடி )

திரு. வ. நந்தகுமார்
( அம்மன் கோவிலடி, கரணவாய் தெற்கு )

திரு. செ. கந்தசாமி
( முதலி கோவிலடி, கரணவாய் கிழக்கு )

உரிமையாளர்
( ஜெகா மோட்டோர்ஸ், நெல்லியடி )

திரு. க. இரத்தினசிங்கம் J. P.
( கிராமசேவையாளர், கரணவாய் மத்தி )

திரு. D. M. வேதாரணியம்
( ஆசிரியர், கரணவாய் கிழக்கு )

திரு. க. குணலிங்கம்
( கரணவாய் மத்தி )

திரு. சி. பத்மநாதன் J. P.
( கனன் போட்டோ பிரதிநிலையம், பருத்தித்துறை )

உரிமையாளர்
( உதயா பேக்கரி, வல்லைவீதி சங்கானை )

திரு. சி. குகதாசன்
( தேவாலய வீதி, சங்கானை )

திரு. அ. கமலதாசன்
( G. P. S. றோட், கல்வியங்காடு, யாழ்ப்பாணம் )

# அறநெறி கூறும் திருக்குறள்

<< செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் >>



ஆறாவது குறளில் ஐம் பொறி வழியாக எழுகின்ற ஆசைகளை அவித்தவனின் பொய்ம்மை இல்லாத ஒழுக்க நெறியில் நின்றவரே நிலையான வாழ்வினர் ஆவர் என்ற பொருளிற் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

6. பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக
நெறிநின்றார் நீடு வாழ்வார்.

மெய், வாய், கண், மூக்கு, செவியென்னும் பொறிகளின் தூண்டலால் வினைகள் உண்டாகின்றன. பொதுவாக மனிதனின் முதல் எதிரிகள் இவ் ஐம்பொறிகளே என அறிஞர்கள் குறிப்பிடுவதுமுண்டு. ஆசைகளுக்குக் காரணமாக அமையும் இவற்றை வெல்லக் கூடியவனே தூய ஒழுக்கநெறியில் வாழத் தகுதியுடையவன்! புலனை அடக்கும் தகுதி பெற்றவன் வினைகளின் இடையூறு இன்றி இரு உலகிலும் நீடுவாழும் தகுதியுடையவனாக விளங்குவான் என்பதனை உணரவைக்கிறார்.

ஏழாவது குறளில் தனக்கு யாதொன்றும் ஒப்புமை இல்லாதவனின் திருவடிகளைச் சேர்ந்தார்க்கு அல்லாமல், பிறர்க்கு மனக்கவலையை மாற்றுதல் அரிதாகும் என்ற பொருளிற் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

7. தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

இக்குறளுக்கு உரை விரித்த பரிமேலழகர் ஒருவாற்றாலும் தனக்கு நிகரில்லாதவனது தாளைச் சேர்ந்தார்க்கல்லது

மனத்தின் கண் நிகழுந் துன்பங் களை நீக்குதல் உண்டாகாது எனக் குறிப்பிடுகிறார்.

மேலும் அவர் குறிப்பிடுவ தாவது இறைவனின்தாள் சேரா தார் பிறவிக்கு ஏதுவாகிய காம, வெகுளி, மயக்கங்களை மாற்றமாட்டாமையாற் பிறந்து அவற்றால் வருந் துன்பங்களுள் அழுந்துவர் என்பதாம்.

எட்டாவது குறளில் அறக் கடவுளான அந்தணனின் திரு வடிகளைச் சேர்ந்தவர்க்கு அல் லாமற் பிறர்க்கு, இன்பமும் பொருளும் ஆகிய கடல்களைக் கடத்தல் இயலாது என்ற பொரு ளிற் பின்வருமாறு எடுத்துரைக் கிறார்.

8. அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

பல்வேறுபட்ட அறங்களெல் லாவற்றையும் தனக்கு வடிவாக வுடையனாகலின் "அறவாழியந் தணன்" என இங்கே இறை வனை வள்ளுவர் குறிப்பிடுவ தாகப் பரிமேலழகர் குறிப்பிடு கிறார். அறத்தின் நாயகனைச் சேராதார் மீண்டும் மீண்டும் பிறவியை எடுத்துப் பிறவித்துன் பத்தை அனுபவிப்பர் என்ப தனை இக்குறளில் அழகாக விளக்குகிறார் மணிவாசகப் பெருமான். திருவாசகத்தில் நீத் தல் விண்ணப்பமாகப் பாடிய பாடல்கள் இக்குறளின் தன்மை யுடையனவாய் நிற்பதை உணர லாம். இக்குறளுக்கு உரை சொன்ன பரிதியார்

தன்மமென்னுஞ் சமுத்திர மாகவுள்ள பரமேசுவரன் பாதத் துணையில்லாதவர் பாவக் கடலை நீந்தமாட்டார் என்ப தும் சிந்திக்கத்தக்கதாகவுள்ளது.

ஒன்பதாவது குறளில் எண் வகைக் குணங்களின் உருவான இறைவன் திருவடிகளை வணங் காததலை, கேளாக் காதும், காணாக் கண்ணும் போலப் பய னில்லாதது என்ற கருத்தை வெளிப்படுத்திப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

9. கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

தத்தமக்கேற்ற புலன்களைக் கொள்ளற்கு இல்லாத பொறி களைப் போலப் பயன்படுதல் உடையனவல்ல எண்குணங்களை யுடையானது தாள்களை வணங் காத தலைகள் எனப் பரிமேலழ கர் விளக்குகிறார். எண்குணங்க ளாவன. தன்வயத்தனாதல்,

◯ மன அமைதி வேண்டுமானால் பிறரிடம் குற்றம் காணாதே. ◯

தூயவுடம்பினனாதல், இயற்கை யுணர்வினனாதல், முற்றுமுணர் தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருளுடைமை, முடி விலாற்றலுடைமை, வரம்பில் இன்பமுடைமை எனச் சைவாக மம் கூறுகின்றது. வணங்காத தலைகள் பயனற்றவை எனத் திருமுறைகள் எடுத்துரைப்பதும் நோக்கற்பாலது.

பத்தாவது குறளில் இறை வனின் திருவடிகளைச் சேர்ந்த வர்களே பிறவிப்பெருங்கடலைக் கடப்பார்கள். சேராதவர்கள் பிறவியைக் கடத்தல் இயலாது என்ற பொருள்படப் பின்வரு மாறு குறிப்பிடுகிறார்.

10. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.

பிறவித்துயரில் இருந்து வீடு பேற்றினை அடைவதற்கு இறை வன் அடியினைச்சேர வலியுறுத் தும் இக்குறள் கடவுள் வாழ்த்து அதிகாரத்தின் நிறைவுக்குறளாக அமைந்துள்ளது. இக்குறளினை விரித்து உரைசொன்னபரிமேலழ கர் - காரண, காரியத்தொடர்ச் சியாய்க் கரையின்றி வருதலின் ''பிறவிப் பெருங்கடல்'' என் றார் எனவும், 'சேர்ந்தார்' என் பது சொல்லெச்சம். உலகியல்பை நினையாது இறைவனடியையே நினைப்பார்க்குப் பிறவியறுத லும், அவ்வாறன்றி மாறி நினைப் பார்க்கு அஃது ஆகாமையுமாகிய இரண்டும் இதனால் நியமிக்கப் பட்டன எனக் குறிப்பிடுகிறார்.

திருவள்ளுவர் இவ்வதிகா ரத்தில் வரும் முதற்குறளில் இவ்வுலகுக்கு நிமித்த காரண னாய இறைவனது உண்மையை நிலைநிறுத்தியபின், அவருக்கும் மனிதராய எமக்குமிடையி லிருக்கவேண்டிய தொடர்பினை எடுத்துக்காட்டுகிறார். பின் எம்மை ஆற்றுப்படுத்தும் இறை வனைக் கண்டு வணங்குதல் வேண்டுமென்றும், அதன்பின் அவருள்ளத்திலிருந்து கூறுவ தைக் கேட்டு இடைவிடாது நினைத்தல் வேண்டுமென்றும், அவ்வாறு நினைப்பது மட்டு மன்று, அவர் குணங்களை உணர்ந்து வாழ்த்தல் வேண்டு மென்றும், ஈற்றில் அவரோடி ணங்கி அவர் நெறி நிற்றல் வேண்டுமென்றுங் கூறுகின்றார்.

[ தொடரும்......

தனி மனிதன் தன்னை உயர்த்தும் சாதனத்தைத் தேடிப்
பெற்றுத் தன்வாழ்வு தன்கையில் உள்ளது என்ற முடிவை
அறியும் போது அவனது கௌரவம் சிறந்து விளங்கும்.

அறவழியில் வராத செல்வம் தேய்ந்து விடும்.

# நம்பிக்கைகள்

■ க. சிவசங்கரநாதன் ■

வாழ்வின் ஆதாரமே நம்பிக்கைதான், நம்பிக்கைகள் தாம் வாழ்வின் வளமாக்கிகள், ஊக்கிகள், தூண்டிகள் உந்துவிசைகள் ஆகும். சமயத்தின் ஆதாரமும் அடிப்படையும் நம்பிக்கையே. சைவசமயத்தவர்கள் பண்டைக் காலந்தொட்டுப் பல சம்பிரதாயங்களையும் ஆசாரங்களையும் மேற்கொண்டு வருகின்றனர் அவ்வாறு மேற்கொள்வதால் நன்மைகளையே அடைந்து கொண்டு வருகின்றனர் இவை பரம்பரை பரம்பரையாகப் பேணப்பட்டு வருபவை சம்பிரதாயங்கள் பல வற்றிற்கு விஞ்ஞான பூர்வமான விளக்கங்களையோ, காரணங்களையோ தந்துவிட முடியாது அவ்வாறு தரமுடியாமையினால் அவை பகுத்தறிவுக்கு ஒவ்வாதவை என்றும் மூடப்பழக்கவழக்கங்கள் என்றும் அவற்றைவிலக்கி வைப்போரும் உள்ளனர் சிலர் சம்பிரதாயங்களுக்கும் ஆசாரங்களுக்கும் விஞ்ஞான விளக்கங்கள் கொடுப்பதற்கு முயன்று பார்க்கின்றனர். இன்றைய உலகில் எம்மாற் புரிந்து கொள்ள முடியாதவை, விளக்கம் கூற முடியாதவை, ஏராளம், அதனால் அவற்றையெல்லாம் பொய் என்றோ மூடநம்பிக்கைகள் என்றோ தள்ளிவிட முடியுமா? விஞ்ஞானம் வளர்ச்சிபெற்றாலும் அச்சக்தியைக் கூட இயக்க அதற்கு மேற்பட்ட சக்தி ஒன்று உண்டு என்பதை யாம் உணர வேண்டும், மதிக்கவேண்டும்.

சம்பிரதாயங்கள், ஆசாரங்கள், சமய ஒழுக்கங்கள், நம்பிக்கைகள், மரபுகள், பாரம்பரியங்கள் என்பன தொன்றுதொட்டுப் பரம்பரை பரம்பரையாகவே கைக்கொள்ளப்பட்டு வருபவை. அவை மனித சமுதாயத்திற்கு ஒவ்வாதனவென்றால் எப்போதோ அழிந்து போயிருக்கும் அவை பயன் உள்ளவையாக இருந்து வந்தமையினாலும் மனித சமுதாயத்தை வாழ்வித்து வருகின்றமையினாலும் தான் இற்றைவரை நிலைத்து நிற்கின்றன அவை அனுபவத்திரள். வாழ்க்கை அனுபவங்களாகத் தொடர்ந்து வருபவை பண்பாடாக ஒட்டிக் கொண்டவை பேணப்படுபவை காலத்தை வென்று நிற்பவை அவற்றை நாமும் அறிந்து வாழ்க்கையிற் கடைப்பிடிப்பதால் நன்மையே பெறுவோம். மூடநம்பிக்கைகள் என ஒதுக்கித் தள்ளி விடுவோமாயின் முன்னோரின் அனுபவங்களை அலட்சியம் செய்தவர்கள்

பிரியமான வேலை எதுவும் கஷ்டமானதே அல்ல.

ஆவோம் அவர்களின் அனுப வங்களிலிருந்து பெறக் கூடிய வாழ்க்கை நலன்களை ஏன் இழக்க வேண்டும்? நம் முன்னோர் அளித்த அருஞ்செல்வங்கள் பேணிப்பாதுகாக்கப்பட வேண் டியவை சைவசமய ஆசாரங்கள், ஒழுக்கங்கள் என்பவற்றை அறிந்து பின்பற்ற வேண்டியது நமது கடமை.

சைவ ஆசாரங்கள், நம்பிக் கைகள் என்பனவற்றை நோக்கு வோம். பெரியோர் தரும் பொருளை ஒருகையால் வாங்கக் கூடாது சான்றோர்க்கு ஒருகை யால் ஒன்றைக் கொடுக்கக் கூடாது. இரண்டுகையாலும் வாங்கவேண்டும் இரண்டு கையா லும் கொடுக்க வேண்டும்.

மாலைப்பொழுதில் அதாவது பகலும் இரவும் அல்லாத இர ண்டுங்கெட்ட நேரத்திற் படுத்து உறங்குதல், வழிநடந்து செல் லுதல் உணவு உண்பது தவிர்க் கப்படவேண்டும்.

புல்விளைநிலம், பசுச்சாணம், இடுகாடு, வழிப்பாதை, தீர்த் தம் உள்ள இடம், ஆலயம், நிழல் உள்ள இடம், பசுக்கள் நிற்கும் இடம், வெண்மையான சாம்பல் மேடு ஆகிய இடங்களில் மல சலம் கழித்தல், எச்சில் உமிழ்தல் ஆகாது ஒருவர் ஓரிடத்திற்குப் புறப்பட்டுச் செல்லும் போது பின்னின்றுகூப்பிடக்கூடாது தும் மக் கூடாது, மறந்தும் எங்கே போகிறீர் என்று கேட்டல் ஆகாது. திங்கள், புதன், சனி ஆகிய நாட்களில் ஆடவர்களும் செவ்வாய், வெள்ளி நாட்களில் பெண்களும் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்யலாம். அமா வாசை, பௌர்ணமி சிராத்தம் முதலான கர்மங்கள் செய்யும் நாட்கள், ஜன்மநட்சத்திரம், விரததினங்கள், உபவாச காலங் கள் ஆகியவற்றில் எண்ணெய் தேய்த்துக்குளிக்கக் கூடாது.

அட்டமி, நவமி, அமாவாசை, பௌர்ணமி, கிரகணகாலம், ஜன்மநட்சத்திரம், மஹாளய பட்சகாலம், மாதப்பிறப்பு, வெள்ளிக்கிழமை ஆகிய காலங் களில் முடிவெட்டுதல், சவரம் செய்தல் ஆகாது.

வீட்டில் ஒரு பொருள் இல்லையென்றால் அதை எவரி டமும் இல்லை என்று சொல்லா மல் அப்பொருளை வாங்கி வாருங்கள் என்று கூறவேண்டும். இல்லை என்ற சொல்லைப் பாவிப்பதைத் தவிர்ப்பதும் நல் லது.

இரவில் வீட்டைக் கூட்டுதலோ கூட்டியள்ளிய குப்பையை வீட் டுக்கு வெளியே கொண்டுபோய்க் கொட்டுதலோ கூடாது. இவ் வாறு செய்தால் வீட்டில் இலட் சுமீகரம் போய்விடும்.

தலையை விரித்துப் போட்டுக் கொண்டு வீட்டில் உட்காரவோ,

நடக்கவோ, வெளியிற் செல்லு தலோ கூடாது மங்கள காரியங் களின் போது அவிழ்த்து விரித்த கூந்தலுடன் நிற்கக்கூடாது.

எரிகின்ற விளக்கையோ, தீபத்தையோ வாயினால் ஊதி அணைக்கக்கூடாது.

இரவு நேரங்களில் மரங் களின் கீழே தங்குதல் கூடாது. குடும்பத்தவர், நண்பர், உறவி னர் ஆகியோரைத் தூர இடங் களுக்கு வழியனுப்பிய பின்பும் வீட்டிற் சுப காரியங்களை நடாத்தி விட்டும் உடனே வீடு கழுவுதல், ஸ்நானம் செய்தல் ஆகாது.

வெள்ளிக்கிழமைகளிலும் மற் றும் நாட்களில் இரவு வேளை களிலும் வீட்டிலிருந்து பணம், பொருட்கள், நூல்கள் ஆகிய வற்றை எடுத்துப் பிறருக்குக் கொடுக்கக் கூடாது. இரவில் வேட்டி, துணிவகைகளைத் தோய்க்கக்கூடாது, பூமியை உழு தல் மரம் வெட்டுதல், இரகசி யம் பேசுதல் என்பவையும் இர விற் செய்தல் தவிர்க்கப்பட வேண்டும்.

இவ்வாறு ஒழுகினால் வாழ் விலே சுகமும் சுபீட்சமும் பெற லாம் என ஆசார நூல்கள் கூறு கின்றன. எனவே, நல்ல நம்பிக் கைகளைப் பேணி, நல்லவர்க ளாக, ஒழுக்கம் உள்ளவர்களாக வாழும் போது தான் கடவுளின் திருவருள் முழுமையாகக்கிடைக் கும் கடவுளின் திருவருளினால் தான் நாம் நினைத்த காரியங் கள் கைகூடுகின்றன, எமது வாழ்வு செழிக்கிறது என்பதை உணர்வோமாக!

சிந்தனைக்கு சில —

★ மனிதன் தான் எண்ணியபடி செய்துமுடித்தால் அது மதியின் வெற்றி என்கிறான். வேறு விதமாக முடிந்தால், அது விதி யின் செயல் என்கிறான்.

★ விடாமுயற்சியும், குறிக்கோளும் வெற்றிப்பாதையில் முன்னே றும் இரு சக்கரங்கள்.

★ இலட்சியமில்லாத மனிதனின் வாழ்வு ஆழ்கடலில் துடுப் பில்லாத படகு போன்றது.

★ பணத்தை மனிதன் ஆளவேண்டுமே தவிர, பணம் மனிதனை ஆளக் கூடாது.

★ தோல்வியை துச்சமென மதித்து விடாமுயற்சியுடன் செயற் பட்டால் வெற்றி வெகுதூரத்தில் இருக்காது.

○ வெற்றி எண்ணத்தைப் பொறுத்தே இருக்கிறது. ○

# சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்

## இப்பழமொழியின் உண்மை விளக்கம்

— ஆ. கதிர்காமத்தம்பி —

நம்முன்னோர்களினால் வழங்கப்பட்டு வந்த பழமொழிகள் பொன்போலப் போற்றப்பட வேண்டியவை; பல அரியகருத்துக்களைக் கொண்டவை, அரிய தத்துவப்பொருள்களை உள்ளே கொண்டு மிளிர்வன. அவற்றுட் சில வெளிப்படையாகச் சாதாரண பொருள்களைக் கொண்டவை போலத் தோன்றுவன. ஆனால் அரிய பொருள்களைத் தம் அகத்தே கொண்டு மிளிர்வன. அவ்வகையில் 'சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்' என்பதும் ஓர் அரிய பொருளைத் தன்னகத்தே கொண்டதுமல்லாமல் முருகனது அருட்கொடையையும் விளக்குவதாகும். அது தான் என்ன? என்பதைப் பார்ப்போம்.

இளந் தம்பதிகள் இருவர் முருக பக்தர்கள்; சிறப்பாக இல்லறம் நடாத்தி வந்தனர். சிவ பக்தர்கள், சந்நியாசிகளை அன்போடு வரவேற்று உபசரித்து உணவளித்து மகிழ்ந்து வந்தனர் ஆயின் அவர்களை ஒருவருத்தம் வாட்டி வந்தது.

ஒருதினம் முருக பக்தர் ஒருவர் அவர்கள் இல்லத்திற்கு வந்தார். அவர்கள் அவரை அன்போடு உபசரித்து வரவேற்றனர். அவர் வந்தவேளையோ பிற்பகல் இரண்டு மணியாகும். உணவு வேளை கழிந்து இருந்தாலும் அவர்கள், இருந்த உணவோடு அன்பர்க்கு உணவு அளித்தனர். சாதம் போதிய அளவு இருந்தது. ஆனால் சட்டியில் கறிதான் குறைவு. சட்டியில் இருந்த கறிகளை வழித்தே போடவேண்டி இருந்தது எனினும் அன்பர் சந்தோஷமாக உணவு அருந்தினார். அவர் உணவருந்தும் போதே தம்பதிகளின் மனக்குறையைக் குறிப்பினாலே உணர்ந்து விட்டார். அக்குறையை நீக்கும் வழியைக் கூற விரும்பினார். அன்பர்களே வருந்தாதீர். " சட்டியில் இருந்தால் தான் அகப்பையில் வரும் " என்று கூறிவிட்டுச் சென்றார்.

தம்பதிகள் இருவரும் 'தாம் சட்டியை வழித்துக் கறி போட்டதைப் பற்றித்தான் சந்நியாசி கூறிவிட்டுப் போயினார்' என்று நினைத்து அவ்வன்பர்

எதிர்ப்பு எங்கு இல்லையோ அங்கு வெற்றி இல்லை.

மனம் மகிழும் வண்ணம் உண வளிக்க முடியாமற் போயிற்றே என்று கவலைப்பட்டனர்.

மாதங்கள் சில கழிந்தன. அவ் முருக பக்தர் மீண்டும் அவ் வீட்டிற்கு வந்திருந்தார். அவர்கள் இருவரும் மிகுந்த மகிழ்ச்சியோடு அவரை மகிழ்விப்பதற்காகச் சட்டிகள் நிறையக் கறிகளைக் காய்ச்சி மிகுந்த அன்போடு உபசரித்து அவருக்கு உணவளித்தனர். சாப்பிடும் பொழுது கறிகளை அள்ளி அள்ளிப் போடுவதை அவதானித்த அவ்வன்பர் தாம் முன்பு கூறிய வார்த்தையின் பயன்தான் இச் செயல் என நினைவு கூர்ந்தார். அத்தம்பதிகளிடம் காணப்பட்ட இருவகை மனக்குறைகளையும் அவதானித்தார். அவற்றைப் போக்க நினைத்தார் உணவு உண்டபின் அவர்களைப் பார்த்து அன்பர்களே! உங்கள் மனத்தில் இரு குறைகள் உங்களை வாட்டுகின்றன. முன்பு நான் இவ்விடம் வந்தபோது நான் கூறியதன் உண்மைக்கருத்து விளங்காமையால் வந்தவருத்தம் ஒன்று அடியேன் வந்தநேரம் அகாலமாயிருந்தும் மிகுந்த அன்போடு உபசரித்தீர்கள். சட்டியை வழித்து இருந்த கறியோடு அன்புசேர்த்து அமுதூட்டினீர்கள். அது இல்லறத்தில் உள்ள உங்களின் உயர்ந்த பண்பையும் அன்பையும் காட்டியது. அதனாலே நான் மிகவும் மகிழ்ந்து உங்களுடைய உண்மையான மனக் குறையை மாற்ற விரும்பி அதற்குரிய வழியையே கூறிச்சென்றேன். நீங்களோ கலியுகவரதன் குகன், கடம்பன், சரவணபவன் ஆகிய எம்பிரானின் பக்தியில் அமிழ்ந்துபவர்கள். அப்பெருமானின் அருள் கிடைத்தேதீரும் என உணர்ந்து 'சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்' என்று வழிகூறிச் சென்றேன்.

நீங்கள் அதன் உண்மைப் பொருளை உணரவில்லை என்பதை இப்பொழுது தெளிந்தேன் அவ்வார்த்தையில் சட்டி என்ற பதம் கந்தசட்டி விரதத்தைக் குறிக்கும். அகப்பை என்பது பெண்களின் கருப்பையைக் குறிக்கும். அதாவது அகம்+பை, உள்ளே உள்ள பை என்பது கருத்து. கந்தசுவாமியாரின் கந்தசட்டிவிரதத்தை முறையாக அநுட்டித்தால் கருப்பையிலே அப்பெருமானது அருளினாலே புத்திரன் உதிப்பான் என்பது அவ்வார்த்தையின் உண்மையான கருத்தாகும் எனவே கந்தசட்டி விரதத்தை முறையாக அநுட்டித்து உங்கள் குறையை நீக்கி மகிழுங்கள் என்று விளக்கிவிட்டு அவ் முருகபக்தன் சென்றார்.

தம்பதிகள் இருவரும் தமது இரு மனக்குறைகளும் நீங்கப் பெற்றவராய் மிகுந்த பக்தியோடு அடுத்து வந்த ஐப்பசி மாத வளர்பிறைச் சட்டிவிரதத்தைச் செல்வச்சந்நிதியில்

நீதி மெதுவாகத்தான் நகரும்.

முறையாக அநுட்டிக்கத் தொடங்கி ஆற்றிலே காலையில் நீராடி பெருமானைச் சேவித்து அவர் புகழ்பாடிக்கொண்டிருந்து மாலைப்பூசை முடிய அவரின் தீர்த்த அமுதத்தையே மருந்தாக உண்டு இப்படியே ஐந்துநாளும் கழித்து ஆறாம் நாள் சட்டித் திதியில் உபவாசம் இருந்து விசேடமாகப் பூசித்துச் சூரசம் மாரத்தைக் கண்டுகளித்து அடுத்தநாட் காலையில் பார ணைப் பூசையைத் தரிசித்து அடியார்க்கு அமுதூட்டித் தாமும் பாரணம் முடித்து மகிழ்ச்சியோடு வீடுதிரும்பினர். சந்நிதிப்பெருமான் அருளினாலே கருவுற்று முருகனைப்போல் ஓர் ஆண்மகவைப் பெற்று முருகனை யும் சந்நியாசியையும் போற்றி மகிழ்ந்தனர்.

அன்பர்களே! சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும் என்பதன் கருத்துத் துல்லியமாக விளங்குகிறதல்லவா? மேலார்ந்த வாரியாக அதனை நோக்கும் போது, ஒருவர் உணவு பரிமாறும் போது சட்டியில் கறி இருந்தாற் றானே அகப்பையில் எடுக்கும் போது வரும் என்ற பொருள் தொனிக்கும். தத்துவப் பொரு ளைக் கூர்ந்து கவனிக்கும்போது '' முருகப்பெருமானைக் குறித் துக் கந்தசட்டிவிரதத்தை முறை யாக அநுட்டித்தால் கருப்பை யிலே புத்திரன் வருவான் '' என் பது பொருளாவது தெளிவாகும்.

எனவே, முருக அன்பர்கள் கந்தசட்டி விரதத்தை முறை யாக அநுட்டித்து அவன் அரு ளாற் பயன்பெறுவார்களாக.

ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ

---

சொந்த வாழ்க்கையில் நாம் சிக்கனமாக இருந்தால்த்தான் நம்மை அண்டியுள்ளவர்களுக்கு பொருளுதவியோ, அல்லது பண வுதவியோ செய்ய இயலும். மற்றவர்கள் மதிக்கவேண்டும் என்ற எண்ணத்தினால் தேவையில்லாதனவற்றையெல்லாம் மென் மேலும் பெருக்கிக்கொண்டு போனால் ஒருநாளும் திருப்தி ஏற் படாது. ஒன்றுக்குமேல் ஒன்று என வசதியைப் பெருக்கிக் கொண்டு போனால் எப்போது பார்த்தாலும் மன உளைச்ச லில்தான் வாழவேண்டிவரும். அதுமட்டுமல்ல எவ்வளவு பணம் நம் கையில் வந்தாலும் போதாது என்ற எண்ணம்தான் ஏற் படும். அப்படியான நிலையில் நாம் இருந்தால் எவ்வகையில் தானதருமம் செய்ய இயலும். ஆகவே போதும் என்ற மன துடன் வாழ்ந்தால் நாமும் உயர்ந்து மற்றவர்களையும் வாழ வைக்கலாம்.

செய்ய முடிந்தவன் சாதிக்கிறான்.

# வாழ இது வழி

-- கே. எஸ். சிவஞானராஜா --

மாதா, பிதா, குரு, தெய்வத்தை மதிக்காத எந்த ஒரு மனிதனும் இந்த உலகத்தில் நன்றாக வாழ்ந்த சரித்திரம் இல்லை. ஆதலால் வளர்ந்து வரும் சமுதாயம் வல்லசித்திகளோடு வாழ மாதா, பிதா, குரு தெய்வத்தினை மதிப்பதும், ஆதரிப்பதும் ஏற்றதொரு வழியாகும். தெய்வமோ எப்போதுமே எம்மை அவதானித்த வண்ணம் உள்ளது இயற்கையோ எம்மையும், எமது நடவடிக்கைகளையும் உற்றுநோக்கிய வண்ணம் உள்ளது. நாம் என்னதான் தவறுகள் செய்தாலும் இயற்கை பதிவுசெய்து விடும். இயற்கை என்று சொல்லும் போது நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், மரங்கள், பறவைகள், நவகோள்கள் என இன்னும் பலவும் அடங்கும். ஆதலால் யாவற்றையும் மதிக்கவும், போற்றவும் செய்ய வேண்டிய கடப்பாட்டினில் மனிதன் இருக்கின்றான். மேற்சொன்ன மதிக்குமாற்றலை ஒருவன் தகுதியாகப் பெற்றுவிட்டால் அதுவே இவ்வுலகில் வாழ்வதற்குரிய வழியாகும். பீடுபெற நில் என்பது ஔவையின் அமுதம். ஒரு மாணவனை ஒரு மணித்தியாலம் கதிரையில் இருக்கச் செய்வதே பெரிய சிரமமாக உள்ளது. அவ்வாறு இருந்து கற்பானாகில் நிச்சயம் பெரியவனாகி விடுவான். விவசாயி மண்ணோடு நிற்பதனால் தான் நாம் சாப்பிடுகின்றோம். பஞ்சம் வரும் போதுதான் மண்ணைப் பார்க்கின்றோம். ஆகவே மண்ணைப் போற்றுவாயாக! இதனால் நீ பேறடைவாய். யாரொருவன் தன்னை விளம்பரப்படுத்துகிறானோ அவன் தன்னை மாசுபடுத்துகிறான். ஆதலால் வாழ்வதற்குப் பிறந்த நீ, உன்னை விளம்பரப்படுத்தாதே! பதிலாக நீ பணிந்து கொள், கூரம்பாயினும் வீரியம் பேசேல்.

வாழ்க்கை என்னும் இன்னிசை இரண்டு கம்பிகளின் இனிய இசைகளால் உருவாகிறது. ஒரு கம்பியினுடைய பெயர் தொண்டு. மற்றொன்றின் பெயர் அன்பு. தொண்டு உலகத்தை கவனிக்கச் செய்கிறது. அன்பு உள்ளத்தைக் கணிக்கச் செய்கிறது.

முரண்பாடுகள் இல்லாமல் வாழ்க்கை இல்லை.

# ஏறுமயில் ஏறி விளையாடுபவன்

() செ. ஸ்ரீநிவாசன் ()



இறைவன் பல வடிவங்களிற் காட்சி தந்துகொண்டு தன் திருவிளையாடல்களை நடாத்திக் கொண்டிருக்கின்றான். நடராஜனாகத் தில்லையில் திருநடனம் புரிகின்றான் மாயக்கண்ணன் கோபியருடன் நடனமாடுகின்றான். அதுபோல முருகப்பெருமான் ஏறுமயில் ஏறிவிளையாடுகின்றான். உலகை மயில்மீது ஏறி வலம்வந்த பெருமான் உலகை ஆட்டுவிக்கின்றான். அது அவன் திருவிளையாடல்.

''கொடும் சூரன் நடுங்க வெற்பை இடிக்கும்
கலாபத் தனிமயில் ஏறும் இராவுந்தனே''
( வெற்பு: மலை )

என்று அருணகிரிநாதர் பாடியுள்ளமையை இங்கு கவனிக்கலாம்

சூரன் யார்? எமது மும்மலங்களுமே அவையாம், மலங்களை இடிஇடியென இடித்து விரட்டி நடனமாடும் செவ்வேளின் மாட்சிமைதான் என்னே! ஆம் ''வெஞ்சூர்க் கொன்ற ராவுந்தன்'' அவன்.

''அறுவர் கொங்கை விரும்பி'' உண்ட சிறுவனாகவே இன்றும் அவன் எமக்குக் காட்சியளித்தாலும் ஞானப்பாலை அள்ளியள்ளிச் சொரியும் வள்ளலல்லவா அவன். ஆம்; மருவுமடியார்கள் மனத்தில் விளையாடும் மன்னன் அவன்.

குழந்தையாகக் காட்சி தந்திடினும் தந்தைக்கு மந்திரம் உபதேசித்தவனல்லவா அவன். ஆம் ஈசனுடன் ஞானமொழி பேசியவன் அவன். கந்தரநுபூதியும், சிவசங்கர தேசிகன், சிவ ஞானோபதேசிகன் என அவனை

() அருளின் மிக உயர்ந்த வடிவம் மௌனம். ()

வாழ்த்துகின்றது. பிரணவப் பொருள் உரைத்த அப்பெருமானை 'எட்டாதஞானகலைதருவாய்' என்று பாடாமல் எப்படிப் பாடுவது.

ஞானமானது புலன்வழிச் செல்லும் உள்ளத்தைத் தகைத்து நிறுத்தும் தன்மையது. '' சிந்தைப் புத்தி மயக்கந்துறக்க'' என்கிறது திருப்புகழ். அதுமட்டுமல்ல, '' வெங்காம சமுத்திரத்தைக் குறத்தி பிரான் அருளாற் கடந்தேன் '' என்பதுவும் '' என் செயல் ஒழிந்து அழிய மெய்ச் சிந்தைவர '' என்பதுவும் இங்கு நினைவுகூரத் தக்கது.

'' யாமோதிய கல்வியும் எம்மறிவும்
தாமேபெற வேலவர் தந்ததனால்
பூமேல்மயல் போயற மெய்ப்புணர்வீர்
நாமேல் நடவீர் நடவீர் இனியே ''

என்ற கந்தரநுபூதியும் இங்கு நினைவுகூரத்தக்கது. ஆகவே, ஞான கலைதரும் அவனை வாயார வாழ்த்துவோமாக!

கூறுமடியார்கள் வினை தீர்த்துப் பரமானந்தப் பெருவாழ்வு தரும் வள்ளலை நோக்கி '' இப் பாச நெஞ்சனை ஈடேற்றுவாயாக' என்று நாமும் பாடுவோம்.

'' ஐவருங் கைவிட்டு மெய்விடும்
போதுன் அடைக்கலமே ''

என்கிறது கந்தரலங்காரம்.

கண்ணன் சங்கு சக்கரத்துடனும் இராமபிரான் அம்பு வில்லுடனும் காணப்படுவது போல் முருகப்பெருமான் வேலாயுதத்துடன் காணப்படுகிறார். வேல் ஆனது சிகராத்திரி கூறிட்ட வேலாகும். (சிகராத்திரி மா பெரும் குன்றுகளோடு கூடிய கிரௌஞ்ச மலை) அந்தவேலால் '' சூர்ப்பேரணி கெட்டது தேவேந்திர லோகம் பிழைத்தது வே ''

அந்த வேலுக்குரியவனை வழிபட '' யானாகிய என்னை விழுங்கி வெறுந்தானாய் நிலை நின்றது தற்பரமே '' என்ற நிலைக்கு எம்மை அழைத்துச் செல்வான் என்பது கந்தரநுபூதியின் மூலம் அறியமுடிகிறது. அதுமட்டுமன்றி '' ஒழிவாய் ஒழிவாய் ஐவாய் வழி செல்லும் அவாவினையே '' என்றதும் உண்மையாகிவிடும்.

ஆம் கூற்றுவன் பாசத்தினாற் பிடிக்கும்பொழுது வந்து அஞ்சல் என்று சொல்லும் அந்த வீரவேல். '' மாசத்தை முட்டி

இன்பம் கனவில் இல்லை; வாழ்க்கையிலேதான் இருக்கிறது.

வடுநெடுங் கூற்றன் வந்தாலென் முன்னே தோகைப் புரவியிற் றோன்றி நிற்பாய் காலனெனை அணுகாமல் '' என்கிறது திருப்புகழ்.

அருவுருவாகி ஒன்றுபோலே யிருக்கும் பொருளை எவ்வாறு புகல்வது! ஆம் '' அரிதிரு மகளாரை ஒருபாகமாக அருள் செய் காரணத்தின் வருவார் '' அவர் புகழைப் பாடிப்பரவுவோமாக!

“ பந்தாடும் மங்கையர் செங்கயற்
பார்வையிற் பட்டுழலும்
சிந்தா குலந்தனைத்தீர்த்தருள்வாய்''
என்று கேட்டால் அவன் தீர்க்கமாட்டானா!

பாகு கனிமொழி மாது குறமகள் பாதம் வருடிய மணவாளன், வள்ளி மணவாளன் ஆன்மாவை மணமுடிக்கும் நாள் வரை காத்திராது அவன் திருவடிகளைத்தேடி நாம் ஓட வேண்டாமோ! குணங்காட்டியாண்ட குருதேசிகனல்லவா அவன்! ஆம் '' காட்டிற் குறத்திபிரான் பதத்தே கருத்தைப் புகட்டின் வீட்டிற் புகுதல் மிக எளிதே '' '' முத்தமிழால் வைதாராரையுமங்கு வாழவைப் போன் வண்தமிழ் பயில்வோர் பின் திரிகின்றவன் '' அவன். அந்த வேலவன் எமக்கு எப்பொழுதுமே துணைபுரிவான்' ஆம், ‘ பயந்த தனி வழிக்குத் துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே'' அதனாலேயே '' எங்கே நினைப்பினும் அங்கே என்முன் வந்தெதிர் நிற்பனே'' என அருணகிரியார் துணிந்து கூறினார். நக்கீரரை ஆண்ட நல்லிசைப் புலவனல்லவா அவன்!

ஆகவே, அவன் பதம் பணிந்து நலம்பல பெற்றிடுவோமாக!

நல்ல மனிதனின் இயல்பு —>

சந்தன மரத்தைச்சுற்றி பாம்புகள் இருக்கும். பாம்புகளோ விஷமுள்ள ஜந்து. அந்தப் பாம்பின் விஷத்தால் சந்தனமரம் கெடுவதில்லை. சந்தனமரம் எல்லோருக்கும் உபயோகத்தை செய்து வருகிறது. அதுபோலவே நல்ல மனிதர்களுக்கு சில கெட்டவர்களது சேர்க்கை ஏற்பட்டாலும் அவர்கள் கெட்டவர்களாக மாறாமல் சந்தனமரத்தைப்போல் உலகத்தவர்க்கு நன்மையே செய்து வருவார்கள்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் மனம் தடுமாறாதே.

# தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே

— சி. செல்லமுத்து —

முன்ன மவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்து மவனுக்கே பிச்சி யானாள்
அன்னையயு மத்தனையு மன்றே நீத்தாள்
அகன்றா ளகவிடத்தா ராசா ரத்தைத்
தன்னை மறந்தாள் தன்நாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே

திருமுறை 6 ; 25 - 7

அப்பர்பெருமான் உலகிய லுக்கும் - ஆன்மவியலுக்குமுரிய பத்துப் படிமுறைகளை இத் தேவாரத்தில் அருளிச்செய்திருக்கிறார். உலகியலில், தலைவி தலைவன்தாள் சேர்தலையும்; ஆன்மவியலில் ஆன்மா இறைவனடி சேர்தலையும் இத்தொடர் உணர்த்துகிறது. இதனையே " தாடலைப்படுதல் " என்பர் இதனால்தான் அப்பர்பெருமான் மற்றோர் இடத்தில் " தலையே நீ வணங்காய் " என்கின்றார்.

பண்டைக்காலத்திலே பெண் பராயமெய்தியதும்; செவிலியின் துணையில் விடப்படுகிறாள். அவள் தக்கதலைவனைத் தேர்ந்தெடுப்பதற்குச் செவிலி வழி வகை செய்கின்றாள். மேலே யுள்ள பாடல் இதனை விரிவாகக் கூறுகின்றது.

1. முதலில் தலைவன் பெயர் யாதெனக் கேட்கிறாள். பண்டைக் காலத்திலேயே பெயர்ப் பொருத்தமும் பார்க்கப்பட்டதை இதனால் அறியலாம்

2. வண்ணம் கேட்கிறாள் என்பதால்; அழகு, குணம், நிறம், சாதி போன்ற யாவும் அறிகிறாள்.

3. ஆரூர் என்பதால் ஊர் விசேடமும் அவசியம் என்பதை அறியலாம்.

4. மேற்படி மூன்றும் அவளுக்குப் பிடித்துக்கொண்டால்; அவன்மேல் அவளுக்கு ஆரா அன்பு மேலிடுகிறது.

5. அவள் தன் பெற்றார்மேல் வைத்திருந்த பேரன்பு வரவரக் குறைகிறது.

சேவை செய்பவனிடம் வேற்றுமை இடையாது.

6. உலகியல் ஒப்பாசாரங்கள் அனைத்தையுங் கைவிட்டுவிடுகிறாள்

7. தன்வசமிழந்து பதிவசமாகிறாள்.

8. இன்னார் மகள் என்பது போய் இன்னார் மனைவி என்றாகிறாள்.

9. தலைவி தலைவனை அடைகிறாள்.

10. தலைவி தலைவன் தாளைப் பற்றிக் கண்களில் ஒற்றிக்கொள்கிறாள்.

### ஆன்மீகத் துறையில் உள்ள பத்துப் பண்புகள்

1. சீடன் குருமூலம் நாம மந்திர உபதேசம் பெறுகிறான்.

2. இறைவனின் பெருமைகளைக் கேட்டறிகின்றான்.

3. இறைவன் அருள்பாலிக்கும் தலவிசேடங்களைக் கேட்கிறான்.

4. பக்தி மேலோங்க அங்கு சென்று தரிசிக்கிறான்.

5. பெற்றார் - உற்றார் - சொத்துச்சுகம் அனைத்துந் துறக்கிறான்.

6. உலகியல் ஒப்பாசாரங்கள் அனைத்தும் விடுகிறான்.

7. தன்வசமிழந்து பதிவசமாகிறான்.

8. இயற்பெயர் போய்ச் சிவனடியான் ஆகிறான்.

9. இறைவன் பாதாரவிந்தத்தில் சரணடைகிறான்.

10. இறைவனின் திருவடிப் பேறு பெறுகிறான்.

இப்பாடலுக்கு எடுத்துக் காட்டாய்த் திகழ்பவர் கண்ணப்ப நாயனார். ஆக ஆறு தினங்களில் இறைவனருள் பெற்றுச்சிவகணத்துள் ஒருவரானார். அவரது பெருமைக்கு அளவு கிடையாது.

'' கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையு மாட்கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ '' (4)

என மணிவாசகப்பெருமான் விதந்து பாடுகின்றார். முற்பிறப்பில் அருச்சுனனாய்ப் பிறந்து வேடன் உருவில் வந்த இறைவனை வில்லால் அடித்ததால்; மறுபிறப்பில் வேடர் குலத்திற்

பிறந்து தன்னை வந்தடையும் தார் என்பர்.
படி சிவபெருமான் அருளிச்செய்

பேர்வண்ணம் ஊர்கேட்டுப் பேரறிவு
பெயர்ந்துதன் நிலையுங் கெட்டு
வார்செருப்பு வாய்நீர் மணமலர்
வாய்சுவையூன் தேன்கலந்து வில்லேந்திச்
சீர்குடுமித் தேவரை உதைத்துமிழ்ந்து
சூட்டியூட்டிக் காத்துக் கண்ணில்
வார்குருதி கண்டிடந்து கண்ணுமப்பும்
பார்த்தனாற் திண்ணன்பின் கண்ணப்பனே.
( 2-ம் 3-ம் அடிகள்; நிரல் நிறைப்பொருள் கோள் )

---

## ★ போரினை நீயும் தீர்த்துவிடு - முருகா ★

சந்நிதி வாழும் சண்முகனே - உன்
சந்நிதி வருகின்றோம் - எம்
சந்ததி வாழசண்முகனே - உன்னை
சரணம் அடைகின்றோம்.

[ சந்நிதி... ]

வேலொடு விளையாடும் வேலவனே - எங்கள்
சந்நிதி வாழும் பாலகனே - எம்
வேதனைதீர வேண்டிநின்றோம் - முருகா
சோதனைதீர்க்க நாடிவந்தோம்.

[ சந்நிதி... ]

பல்குழலாலே ஓடிவந்தோம் - முருகா
பலகுரல்சேர்ந்து வேண்டிநின்றோம்
போரினைநீயும் தீர்த்துவிடு - முருகா
பாரினில்எம்மையே வாழவிடு.

[ சந்நிதி... ]

ஆற்றங்கரைவந்து அமர்ந்துவிட்டோம் - முருகா
ஆறுதலைநீ காட்டிவிடு
ஆறுதலைக்காட்ட மறுத்துவிட்டால் - முருகா
ஆறுதான்எமக்கு தஞ்சமன்றோ.

[ சந்நிதி... ]

தர்சிகா சந்திரதாஸ்

---

○ நேர்மையாக இருந்தால் சாந்தியும் உள்ளத்தெளிவும் உண்டாகும். ○

# பிட்சாடன மூர்த்தி பிட்சை ஏற்றார்

சி. நவரத்தினம்

நடராஜ மூர்த்தியாகிய இறைவன் என்றும் நடனமாடிக் கொண்டிருப்பதனால் தான் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல், ஆகிய பஞ்சகிருத்தியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவர் திருநடனத்தைச் செய்வதனால் உலகமும் அதில் வாழும் சகல உயிரினங்களும் இயங்கிக் கொண்டிருகின்றன. அவரின் திருநடனம் ஒரு கணம் நின்றுவிட்டால் உலகமும் உயிரினங்களும் அப்படியே ஸ்தம்பித்து விடும். இறைவன் உயிர்கள் மீது வைத்திருக்கின்ற பெருங் கருணையினால் தநு, கரண, புவன, போகங்களைப் படைத்து அவற்றை அனுபவிக்கச் செய்து செய்த கர்ம வினைகளின் பயனை அனுபவிக்கச் செய்து பரிபாகம் உண்டாகுமாறு செய்து ஈற்றில் தம் திருப்பாதத்திற் சேர்த்து விடுகின்றார்; இப்படியெல்லாம் சர்வ வல்லமையும் சர்வவியாபகமுமாக விளங்கும் இறைவன் பிட்சை ஏற்றாரென்றால் அது எவ்வளவு விந்தையாகும் அவர் ஏன் பிட்சை ஏற்றார். அவர் யாருக்காகப் பிட்சை ஏற்றார் என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சிவன் பிரமன் சிரசில் ஒன்றைக் கிள்ளியதனால் பிரமகத்தி தோஷம் அவரைப் பற்றிக் கொண்டது. தம்மைப் பீடித்த பிரம்மகத்தி தோஷம் நீங்கும் பொருட்டு அவர் பிட்சாடன மூர்த்தியானார் திருமால் மோகினி வடிவங் கொண்டார் இருவரும் தேவதாரு வனத்திற்குச் சென்று அங்கு வாழ்ந்த முனிவர் நாற்பத்தொண்ணாயிரவரிடத்தும் அவர் தம் பத்தினியரிடத்தும் பிட்சை எடுக்கச் சென்றனர். முனிவர்கள் மோகினியாக நின்ற திருமால் மீதும் அவர் தம் பத்தினியர்கள், பிட்சாடன மூர்த்தியாக நின்ற சிவன் மீதும் மோகங் கொண்டனர். அதனாற் கோபமடைந்த முனிவர்கள் அபிசார வேள்வி செய்து புலி, யானை, பாம்பு, பூதங்கள், முயலகன், அக்கினி, முதலானவைகளை உருவாக்கிச் சிவன்மீது ஏவினர். இறைவன் அவைகளின் தோல்களை உரித்து ஆடையாகப் போர்த்தியவராய்ப் பாம்பை ஆபரணமாகவும் பூதங்களை அடிமைகளாகவும் கொண்டார். இங்ஙனமாக இறைவன் தேவதாரு வனத்தில் வாழ்ந்த முனிவர்களின் செருக்கையும் ஆணவத்தையும் அடக்கி அவர்களை நன்னெறிப் படுத்தினார். எனவே முனிவர்களின் செருக்கை

நம்பிக்கை இருந்தால் தெய்வத்தைக் காணலாம்.

அடக்குவதற்காகவும் தம்மைப் பீடித்த பிரம்மகத்தித் தோஷம் நீங்கும் பொருட்டுமே அவர் பிட்சை ஏற்றருளினார்.

அடுத்து, சுந்தரமூர்த்திநாயனார் திருக்கழுக்குன்றத்தில் இறைவனைத் தரிசித்துக் கொண்டு திருக்கச்சூரை அடைந்தார். அங்குள்ள ஆலக்கோவிலை அடைந்து சிவபெருமானைத் தரிசித்தார். அவர் கோவிலில் இருந்து வெளியே வந்தபொழுது அவருக்கு உணவு அளிக்கும் பரிசனங்கள் இன்னும் அங்கு வராதபடியால் சுந்தரர் பசியோடு கோவிலுக்குப் புறத்தே வந்து தங்கினார். அப்பொழுது சிவன் அவர்முன் ஓர் அந்தணராக வந்து "அன்னப்பிட்சை எடுத்து வந்து உமக்கு அளிக்கிறேன்; அதுவரை நீர் எங்கும் செல்லாமல் இங்கே இரும்" என்று கூறிவிட்டுச் சென்றார். அந்தணராகிய சிவன் அவ்வூரில் அந்தணர் இல்லங்கள்தோறும் சென்று பிட்சை ஏற்றுவந்து சுந்தரருக்கு அளித்தார். அவர் உணவை உண்டு பசிதீர்ந்து மகிழ்ந்து இருந்த வேளை அந்தணராக வந்த சிவன் மறைந்தார். தமக்கு உணவு அளித்தவர் இறைவனே என்று உணர்ந்தார்; உள்ளம் உருகினார். இறைவனின் பெருங் கருணையை நினைந்து வியந்தார்.

கபாலத்திலே நீர், பிட்சை ஏற்றுக்கொள்வதைக் கண்டால் உன் அடியவர் வருந்தமாட்டார்களா? தம் பொருட்டு இறைவன் மறையவராக வந்து அந்தணர்களின் இல்லங்களிற் பிட்சை ஏற்றுத் தம் பசியைப் போக்கிய ஆலக்கோயிலில் எழுந்தருளிய இறைவனின் கருணைதான் என்னே? என்று வியக்கின்றார் சுந்தரர்.

"முதுவாய் ஓரிகதற முதுகாட்
டெரிகொண்டாடல் முயல்வோனே.
மதுவார் கொன்றை புதுவீ சூடும்
மலையான் மகள் மணவாளா!
கதுவாய் தலையிற்பலிநீ கொள்ளக்
கண்டாள் அடியார் கவலாறேரா
அதுவே ஆமாறெதுவோ கச்சூர்
ஆலக் கோவில் அம்மானே.
என்று சுந்தரர் பாடியருளினார்.

எனவே தனக்கு உவமை இல்லாத மேலான இறைவன் தம்மை மெய்யன்போடு பூசித்து வழிபட்டு வரும் மெய்யடியார்கள் மீது தம்கருணையைப்பொழிந்து கொண்டிருக்கின்றார். அடியவர்க்கு எளியவனான இறைவனை நாமும் மெய்யன்போடு

வழிபட்டு வருவோமேயானால் நமக்கு ஏற்படும் துன்பங்களை யும்; கஷ்டங்களையும், ஆபத்துக்களையும் நீக்கி எம்மைக் காப்பாற்றியருள்வார்.

"கடவுளை நம்பினோர் கைவிடப்படார்"

"நம்பினார் கெடுவதில்லை இது நான்கு மறை தீர்ப்பு"

---

## வெற்றி வேலவனே! விரைந்து வருக!

அருவிசூழ் ஆற்றோரத்திலே! அண்ணியருடனே!
ஆனந்தமாக வீற்றிருக்கும் முருகா! சந்நிதியானே!
இன்னும் உன் தங்கையின் வேதனைதீர்க்க
ஈசனே! உரியநேரம் வரவில்லையே! ஏன்?
உறுதியுடன் உரிமையுடன் உன்பாதத்தில்
ஊற்றுகின்றேன் ஏழையேன் கண்ணீர்
என்றும் நீயே என்துணை முருகா!
ஏழிசைபாடி என்கல்வி சிறந்து!
ஐயமின்றிக் கடமைபுரிந்து நற்சேவைபுரிந்து!
ஒழுக்கமுடனே ஒருமனப்பட்டு உன்புகழ்பாடி!
ஓம்சரவணபவ எனும் ஒழுங்கான உன்
ஔஷதம் என்இதயத்தில் ஒளிவீச!
எஃகுபோன்ற உன்ஞானவேல் என்முன்
கிருபைசெய்யக் கருணையுடனே காட்சிதருக!
காளையர் வசப்பட்டுக்கிலிகொள்ளாது கீர்த்தியுடன் குலமானத்
கூரிய உன்பார்வையை என்னிடம் செலுத்து [துடன் வாழக்
கெட்டசெயலை வெட்டென மறக்கக்
கேடில்லாது கைகூப்பி உனைத்தொழுவேன்
கொற்றமுடன் கோதையை வழிநடத்தவருக!

**
*

பணிவு மனிதனின் வாழ்வை உயர்த்தும்.

## மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள்

( மகாபாரதத்திலிருந்து )

# விதியின் அழைப்பு

— சிவத்திரு வ. குமாரசாமிஐயர் —

பாண்டவர்களை வென்று அவர்களிலும் மேம்பட்டவனாக அவனியை ஆளவேண்டும் என்ற பொறாமைக் குணம் கொண்டு தீயவழிகளிற் பல முறைகள் முயன்றும் அவர்களை வெற்றி கொள்ளமுடியாத துரியோதன னுக்கு வழிகாட்ட முனைந்த மாமன் சகுனி கூறிய ஆலோசனைகள் துரியோதனனைமேலும் பாவப்படுகுழியில் தள்ளத்தக்கவையாகவே இருந்தன. அதாவது சூதாடுவதில்த் திறமையற்றவனாகிய யுதிஷ்டிரனைச் சூதாட அழைத்து அதன்மூலம் தோல்வியடையச் செய்யலாம் என்பதே சகுனி கூறிய யோசனையாகும். தன் தந்தையாகிய திருதராஷ்டிர மன்னன் இச்செயலுக்கு உடன்படமாட்டான் என்பது தெரிந்திருந்தும் பேராசையால் அவன் தந்தையுடன் ஆலோசிக்கும் வண்ணம் மாமனாகிய சகுனியை அனுப்பி வைத்தான். மன்னனைச் சந்தித்த சகுனி ''மன்னா, உமது புதல்வன் மிக்க கவலையுடன் இருக்கிறான். அவன் மனக்கவலையை நீக்கவேண்டியது தங்களது பொறுப்பு'' என்று கூறவும், ஆச்சரியமடைந்த மன்னன், துரியோதனனைத் தன்பால் வரவழைத்தான். ''மைந்த! நீ துயருற்று வாடியிருக்கும் காரணம் யாது?'' எனத் துரியோதனனை வினாவினான். தந்தையின் வினாவினால் தனது அவமானத்தையும் கோபத்தையும் பொறுத்துக்கொள்ள முடியாதவனாக இருந்த துரியோதனன் மேலும் சீற்றம் அடைந்தவனாய்த் ''தந்தையே! ஆண்மகன் ஒருவன் தாங்கிக்கொள்ள முடியாத அவமானத்தை நான் தாங்கி உயிர் வாழ்ந்துகொண்டிருக்கிறேன், யுதிஷ்டிரன் பெரும் செல்வமும் கீர்த்தியும் பெற்று மேன்மையடைந்து வருகிறான். எனது நிலை இப்போது தாழ்ந்து

விட்டது. அத்துடன் அவர்கள் என் மனத்தில் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் என்னை அவமதித்து எள்ளி நகையாடினர். அவர்களுடன் சேர்ந்து திரௌபதியும் என்னை அவமதித்து நகையாடினாள்'' என்று இந்திரப்பிரஸ்தத்தில் மணிமண்டபத்தில் தான் நீரென நினைத்து நடந்ததையும், சுவருடன் மோதிக்கொண்டதையும் எடுத்துக்கூறி. ''தந்தையே அவர்களை அழித்து அவர்கள் அடைந்துள்ள பெருஞ்செல்வத்தை நான் அடைவேன், இல்லையேல் அவர்களின் வாளுக்கு இரையாகி மடிவேன். இனி என் உள்ளம் அமைதி கொள்ளாது'' என்று கூறித் தவித்தான்.

இதுவே தக்கதருணம் என்று எண்ணிய சகுனி தனது சூதாட்ட யோசனையை வெளியிட்டான். உடனே, துரியோதனன் சூதாடுவதற்கு அநுமதி தருமாறு தந்தையை வேண்டினான் துரியோதனனின் வற்புறுத்தலால் செய்வதறியாது திகைத்த திருதராஷ்டிரமன்னன் மணிமண்டபம் ஒன்றை அமைக்க ஆணையிட்டு விதுரரையும் தன்பால் வருமாறு அழைப்பித்தார். விதுரர் செய்தி அறிந்ததும் கவலை கொண்டவராய் மன்னனை அடைந்து ''மன்னா! ஏன் இந்த விபரீத சிந்தனை உமது உள்ளத்தில் தோன்றியது? இது கெட்டகாலத்தின் ஆரம்ப அறிகுறி'' என்று தம்மால் இயன்றவரை சூதாட்டம் நடைபெறாது தடுக்க முனைந்தார். விதியின் கைகள் வலிதானவை அல்லவா? திருதராஷ்டிர மன்னன் விதுரரையே சென்று பாண்டவர்களை அழைத்துவருமாறு பணித்தான்.

மிக்க கவலையடைந்தவரான விதுரர் பீஷ்மரிடம் சென்று நடப்பவற்றை எடுத்துரைத்துப் பாண்டவர்களை அழைத்துவர இந்திரப்பிரஸ்த நகர் நோக்கிச் செல்லலானார். பாண்டவர்களைச் சந்தித்து அவர்களை ஆசீர்வதித்தார். விதுரர் கவலையுடன் வீற்றிருப்பதனைக் கண்டுணர்ந்த பாண்டவர்கள் விபரம் கேட்டனர். விதுரர் திருதராஷ்டிர மன்னன் அமைக்கும் மணிமண்டபத்தைக்காண அவர்களை அழைப்பதனையும் அங்கே சூதாட்டம் நிகழவிருப்பதனையும் எடுத்துக்கூறினார். இவற்றைச் செவிமடுத்த யுதிஷ்டிரன் ''தந்தையே! சூதாட்டம் கலகத்தைத் தரும். பெரியவராகிய தாங்கள் நாம் என்ன செய்ய வேண்டும் என்று கட்டளை இடுங்கள் அதன்படி நடக்கிறோம்'' என்று வேண்டிக் கொண்டான்.

அப்பொழுது விதுரர் ''மைந்த, சூது தீங்கு பயப்பதே! நான் முயன்று தடுப்பதற்குச் செயற்பட்டேன், முடியவில்லை. தர்மம் அறிந்தவனா

போட்டி மனப்பான்மை இல்லாமல் பணியாற்று.

கிய நீ எப்படி நடக்கவேண்டும் என்று உனக்குத் தோன்று கிறதோ அதன்படி நடந்து கொள்'' என்று கூறினார். சிந்தனை வயப்பட்டவனாகிய யுதிஷ்டிரன் சிறிய தந்தையே! பெரியதந்தை அழைக்கும் பொழுது செல்லாது இருப்பது இழுக்காகும். விதியைமீறி எவ ராலும் நடக்கமுடியாது. சூது கலகத்தையே தரும் என்று தோன்றுகிறது. நான் வலிந்து சூதாடமாட்டேன். ஆனால் அழைக்கும்போது உடன்படாது இருக்கமுடியாது எனவே அஸ் தினாபுரம் செல்வோம். மின்னல் கண்ணைப் பறிப்பதுபோன்று விதி மதியைப் பறித்து விடு கிறது.'' என்றுகூறி அஸ்தினா புரியை நோக்கிச்செல்ல ஆயத்த மாயினர். விதுரர் கவலை மிக்க வராய்ச் சூதாட்ட நோக்கத்தை வெளிப்படையாக எடுத்துரைத் தார். இவற்றை எல்லாம் செவி மடுத்த யுதிஷ்டிரர், '' சிறிய தந்தையே பெரியதந்தையே என்னை விதி வடிவில் அழைக் கிறார். நடப்பது நலமாக அமை யட்டும்'' என்றுகூறி அஸ்தினா புரியை அடைந்தனர்.

பாண்டவர்கள் அஸ்தினா புரத்தை அடைந்தமையைக் கேள்வியுற்ற துரியோதனன் மகிழ்வுகொண்டு அவர்களை வர வேற்று மணிமண்டபத்துக்கு அழைத்துச்சென்றான். மணி மண்டபத்தைப் பார்வையிட்டு எல்லோரும் மகிழ்வுடன் அமர்ந் திருந்தனர்.

## சூதாட்டம்

மகிழ்வுடன் எல்லோரும் சபையில் வீற்றிருந்த வேளையில் சகுனி தனது திட்டத்தைச் செயற்படுத்துவதிற் கவனமா யிருந்தான். யுதிஷ்டிரரை நோக்கி '' அரசே மகிழ்வான இவ்வேளையில் சூதாட்டம் ஆரம்பிக்கலாம். எல்லோரும் காத்திருக்கிறார்கள் '' என்று கேட்டுக்கொண்டான் அப்போது யுதிஷ்டிரர் '' மன்னா! சூதாடு வது தீமை பயப்பதாகும். புகழ் பெற விரும்பும் மன்னர்கள் தோள்வலிமூலம் பெருமையடை வார்களே அன்றிச் சூது முத லான கபடவழிகளிற் புகழ்பெற விரும்பமாட்டார்கள் '' என்று மறுத்துரை செய்தார். அப் போது, சகுனி '' மன்னரே முறைதெரிந்து கவனத்துடன் விளையாடுவதிற் தோல்வி என் பதற்கே இடமில்லை. பயப்படா மலே பந்தயம் வைத்து ஆடுங் கள், இது குற்றமற்றதே '' என்று பற்பல சொல்லி யுதிஷ் டிரரை வற்புறுத்தினான். மீண் டும் யுதிஷ்டிரர் '' அரசே முனி வர்களும் சிறந்தவர்களும், சூதைப் பாராட்டி உரைத்ததாக எங்கும் இல்லை. சூதாட்டம் வஞ்சனை நிறைந்தது. கபட மாக ஆடப்படுவது. சிறந்த சூதாட்டம் தெரிந்தவன் என்று எவரையும் உலகம் புகழ்வதாக

மனத்தூய்மை இல்லாமல் காரியத்தை சாதிக்கமுடியாது.

யான் அறிந்திருக்கவில்லை. தர்மத்துக்குப் புறம்பானதாக உள்ள இச்சூதாட்டத்தை நீ விரும்பாதே. வஞ்சனையாலே பணம் பொருள் சேர்க்க நீ விரும்புகிறாய், இதற்கு என்னை வற்புறுத்தாதே!'' என்று தர்மத்தை மதிக்கும் பண்புடையனாகிய யுதிஷ்டிரர் மறுத்துரை சொன்ன போது, யுதிஷ்டிரரைத் தூண்டும் வகையிலே சகுனி பேசலானான். ''மன்னரே, அரசர்கள் சூதாட்டம் கபடம் நிறைந்தது என்று கூறி ஒதுங்குவது, அவர்களின் கோழைத் தனத்தைக் குறிப்பதாகும். இது வெறும் விளையாட்டு. இதில் வஞ்சகம் ஏதுமில்லை'' என்று கூறலானான். சகுனியின் உரைகளால் மனவேகம் உண்டாகிய யுதிஷ்டிரர் ''நீர் என்னை அழைக்கும் போது சூதாட்டத்திற் கலந்து கொள்ளாமல் இருப்பது கௌரவக்குறைவு எனவே நான் தயார். என்னுடன் ஆடுவது யார்?'' என்று வினாவினார். உடனே துரியோதனன் ''அரசே நான் பந்தயம் வைக்கிறேன். என் சார்பாக மாமா சகுனி ஆடுவார்'' என்று உரைக்கலானான். அப்போது தருமர் ''மன்னா ஒருவன் பந்தயம் வைப்பதும், ஒருவருக்காக ஒருவர் ஆடுவதும் முறையற்றது'' என்று கூறலானார். அப்போது துரியோதனன் சூதாட்டத்தில் இது சகஜமானது'' என்று கூறி ஆட்டத்தை ஆரம்பிக்கலாம் என்று,வலியுறுத்தினான். பதில் உரைக்க முடியாதவராய் யுதிஷ்டிரர் ஆடத் தொடங்கினார். சபையில் இருந்த பெரியவர்கள் திகைத்து ஏதும் பேசாது வாளாவிருந்தனர்.

விதியின் கைகளில் நாம் பொம்மைகள். ஊழ்வினை 'வந்து ஊட்டும் போது, எம்மால் யாது செய்ய முடியும். ஊழிற் பெருவலி யாவுள? என்பது, என்றும் மாறாவிதி அல்லவா! தர்மவாதியான யுதிஷ்டிரரையும் விதியின் இரும்புக் கரங்கள் பிடித்து வஞ்சக வலையில் வீழ்த்தி விட்டது. விதியை வெல்ல யாரால் முடியும்? இதனால் தான் நல்விதியை நாம் நிர்ணயிக்கும் வகையில் எம்காரியங்கள் அமைய வேண்டும், அதாவது சற்காரியங்களை நற்காரியங்களை நல்ல கர்மாக்களை நாம் கைக்கொண்டொழுக வேண்டும் என்று எம் சமயம் வலியுறுத்துகிறது. ஊழ்வினையின் பயன் பலமாக இருக்கும் என்றுதான் எம். சிந்தனை கூடத்தூய்மையானதாக இருக்க வேண்டும் என்று எம் சமயம் வலியுறுத்துகிறது. இதனையே நாம், தருமரின் வாழ்வில் இடம் பெற்ற விதியின் விளையாடல் மூலம் உணர்ந்து எம் சிந்தனை செயல் யாவும் தூய்மையானதாக்க முயல்வோமாக!


[ தொடரும் ...

ஃஃஃஃஃஃஃஃஃஃஃ

ஆசைகள் வளரவளர தேவைகளும் வளரத்தொடங்கும்.

# சந்நிதியான்

() ந. அரியரத்தினம் ()



தன்னைப் பற்றி மற்றவர்கள் கதைக்கின்ற கதைகளை மீண்டும் ஒருமுறை சிந்தித்துப் பார்க்கின்றார் இளம்பட்டதாரியான திரு. கி. நடராசா அவர்கள் ஏன் தம்பி இன்னும் படிப்பு முடியவில்லையே ... தம்பிக்கு வேலை கிடைப்பதற்கு இன்னும் எவ்வளவு காலம் செல்லும்... ஏன் தம்பி வேலைக்கு எழுதிப்போடவில்லையோ... ஆம்! முப்பது வருடங்களுக்கு முன்பு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தனது கலைப்பட்டதாரிப் படிப்பை முடித்து விட்டுத் தனது கிராமத்திற்குத் திரும்பி வேலையில்லாது வாழ்ந்த குறுகிய காலத்தில் அவரது கிராமத்தவர்களால் முக்கியமாக வயது முதிர்ந்தவர்களால் விளங்கியும் விளங்காமலும் அவரைப் பார்த்துக்கேட்

() ஆற்றல் உள்ள இடத்தில் அகம்பாவம் தானே வந்துசேரும். ()

கப்பட்ட கேள்விகளே இங்கு தரப்பட்டுள்ளன.

30 வருடங்களுக்கு முன்பு அதாவது 1970 ஆம் ஆண்டு தசாப்தத்தில் திரு. கி. நடராசா போன்று நூற்றுக் கணக்கான பட்டதாரிகள் அப்பொழுது வேலை இல்லாது வருடக்கணக்காக வேலைக்காக காத்திருந்தனர். பொதுவாகப் பலர் இந்த வேலையற்ற பட்டதாரிகளை வீட்டிற்கும் நாட்டிற்கும் சுமையாகவே கருதினார்கள். இவ்வாறு நாடு முழுவதும் வேலையற்றுக் காணப்பட்ட பட்டதாரிகளைக் கணக்கெடுத்து வேலை அற்ற பட்டதாரிகள் பட்டாளம் என்றும் இவர்களை அழைக்க முற்பட்டனர்.

பொருளாதார இரீதியாகவும் சமூக இரீதியாகவும் மற்றும் உளவியல் இரீதியாகவும் பல்வேறு பிரச்சனைகளை எதிர் நோக்கிய இந்த வேலை அற்ற பட்டதாரிகள் மனம் குழம்பி நிம்மதி அற்ற வாழ்க்கை வாழ்ந்தது மட்டுமன்றிச் சிலர் வாழ்க்கையின் விளிம்பிற்கே சென்று தற்கொலை செய்து கொண்ட சம்பவங்களும் இடம்பெற்றன. இதனால், பிற்காலத்தில் இவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் நோக்கத்துடன் இளைஞர் விவசாயப்படை என்ற வகையில் காடழிப்பு வேலை, மற்றும் விசுவமடு போன்ற படித்த இளைஞர் குடியேற்றத்திட்டங்கள் என்பன எல்லாம் ஏற்படுத்தப்பட்டன.

1970 ஆம் ஆண்டு பட்டப் படிப்பை முடித்து வேலை அற்ற பட்டதாரிகளில் ஒருவராக வாழ ஆரம்பித்த கம்பர்மலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. கி. நடராசா அவர்களுக்குச் சந்நிதியான் ஏற்படுத்திய அற்புத நிகழ்வினை அடியார்களுக்கு வழங்குகின்றோம்.

திரு. கி. நடராசா அவர்கள் தனது தந்தையின் வழிநடாத்தலினால் வெள்ளி தோறும் சந்நிதிக்குச் சென்று சந்நிதியானை வழிபடுகின்ற ஒரு முருக பக்தனாக வாழ்ந்து வந்தார். அது மட்டுமன்றிச் சந்நிதியானே தனது வாழ்க்கைப் பயணத்தை வழிநடாத்துபவர் என்ற நம்பிக்கையும் அவருக்கு இருந்தது. வேலையற்ற பட்டதாரிகள் அனுபவித்து வருகின்ற துன்பங்களையும் அவர்கள் வாழ்க்கையில் நடைப்பிணமாக வாழ்ந்து கொண்டிருப்பதையும் அவர்களிற் பலர் வாழ்க்கையின் விளிம்பிற்கே சென்றதையும் கண்ணுற்று இது போன்ற ஒரு நிலை தனக்கு ஏற்படக்கூடாது என்பதை முன் எச்சரிக்கையுடன் முடிபு செய்த திரு. கி. நடராசா அவர்கள் இறை நம்பிக்கையான ஒரு முடிபை மேற் கொண்டார்கள்.

வழமை போல ஒரு வெள்ளிக்கிழமை சந்நிதி ஆலயத்திற்

குச் சென்று பசிக்கின்ற ஒரு குழந்தை எவ்வாறு தனது தாயிடம் சென்று பாசத்துடனும் உரிமையுடனும் பசியைப் போக்க உணவைக் கேட்குமோ அதே போன்றுதான் குலதெய்வமாக வழிபட்டு வருகின்ற சந்நிதியானிடம் தான் எதிர்நோக்கி இருக்கும் துன்பங்களிலிருந்து தன்னைக் காப்பாற்றுமாறு, பக்தியுடனும் உரிமையுடனும் வழிபாடு நடத்தலானார்.

எனது துன்பம் உனக்குத் தெரியவில்லையா! உன்னை நம்பியிருக்கின்ற அடியவனை நீ துன்பப்பட வைக்கலாமா! எனது வேதனையைப் போக்க ஒரு வேலை கிடைப்பதற்கு நீ அருள் புரியமாட்டாயா! என்று உள்ளம் நெகிழச் சந்நிதியானிடம் தனது வேண்டுதலை வெளியிட்டார்கள். இவ்வாறு தனது மனக்குறையைச் சந்நிதியானின் திருப்பாதங்களில் ஒப்புவித்து விட்டு நீயே அபயம் அப்பா! எனச்சரணாகதி அடைந்தார்கள். இவ்வாறு தனது மனச்சுமையைச் சந்நிதியானிடம் இறக்கியதனால் அவருடைய மனத்தில் ஒரு நிம்மதி ஏற்பட்டாலும் கூடத் தனது வேண்டுதல் நிறைவேறுமா? எப்போது நிறைவேறும் என்ற ஆதங்கத்துடன் தனது வீடு திரும்பினார்கள்.

வீடு திரும்பிய சில நிமிடத்தில் அவரை யாரோ அழைக்கும் சத்தம் கேட்கின்றது. வெளியே சென்று பார்க்கின்றார். இருவர் அவரிடம் அலுவலாக வந்ததாகக் கூறுகின்றனர். வந்தவர்களிடம் விடயத்தை விபரமாகக் கேட்டார்கள்.

வந்தவர்களில் ஒருவரான காலம் சென்ற திரு. இராஜரத்தினம் அவர்கள் எமது கல்வி நிலையத்திற் புவியியற் பாடம் கற்பிப்பதற்கு ஆசிரியர் தேவை நீங்கள் தான் பொருத்தமானவர் என்பதை அறிந்து உங்களிடம் வந்துள்ளோம். தயவு செய்து மறுக்காமல் ஏற்றுக் கொள்ளுங்கள் உங்களுடைய தகுதிக்கு ஏற்றவகையில் நாங்கள் கொடுப்பனவை வழங்குவதற்கு ஆயத்தமாக இருக்கின்றோம். என்று விடயத்தைக் கூறி முடித்தனர்.

தான் கனவுதான் காண்கிறேனா? அல்லது நடக்கின்ற சம்பவம் நிஜம்தானா என்ற சந்தேகம் திரு. இ. நடராசா அவர்களுக்கு ஏற்பட்டது. ஆனாலும் நடக்கின்ற சம்பவம் நிஜம் தான் என்பதை அவர் உறுதிப்படுத்திய பொழுது அவரது உடம்பு மெய்சிலிர்க்கத்தொடங்கியது அவரை அறியாமலே அவரது உதடு கந்தா! கடம்பா! கதிர்வேலா! ...... என முருகன் நாமங்களை உச்சரிக்க ஆரம்பித்தது.

அறத்தை அடிப்படையாகக் கொண்ட எதுவும் சிதைவுபடாது

கேளுங்கள் தரப்படும். தட்டுங்கள் திறக்கப்படும் என்ற இறைவாக்குச் சந்நிதியானிடத்தில் எவ்வளவு நிஜமானது என்பதற்கு இது போன்ற எத்தனையோ சம்பவங்கள் தினந்தோறும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன வென்பது சந்நிதியானின் பக்தர்களுக்கல்லவா தெரியும்!

தந்தையின் வழிநடாத்தலினால் இளமையிலிருந்தே முருக பக்தனாக வாழ்ந்து வந்த திரு. கி. நடராசா அவர்கள் இச்சம்பவத்திற்குப் பின் தன்னைச் சந்நிதியானுடைய அடிமையாக ஆக்கிக் கொண்டார். தற்பொழுது உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கும் திரு. கி. நடராசா அவர்கள் எம். ஏ. பட்டம் பெற்று யாழ் பல்கலைக்கழகத்தில் இடை வரவு விரிவுரையாளராகவும் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்.

தனது தனிப்பட்ட வாழ்க்கையில் ஏற்பட்ட உயர்வுகளுக்கு மட்டுமன்றித் தனது குடும்பத்தின் வாழ்க்கைப் பயணத்தில் ஏற்படுகின்ற வேதனைகள், சோதனைகள், ஆபத்துக்கள் என்பவற்றிலெல்லாம் சந்நிதியானின் திருவருளே தனக்குப் பக்கபலமாக இருந்து வருகின்றது என்பதற்கு பல்வேறு சம்பவங்களை உள்ளம் உருக நன்றிப் பெருக்குடன் திரு. கி. நடராசா அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

ஓம் முருகா!

---

## வாசகர் பொறுப்பு

இன்று பத்திரிகைகள் சஞ்சிகைகள் எத்தனையோ வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவற்றில் பல மாணவர்கள் மனதையும், மக்கள் மனதையும் கிலேசப்படுத்துபவையாக வெளிவந்து கொண்டிருப்பதை நாம் காண்கின்றோம். அத்துடன் இவைகளில் அதிகமானவை அதிகளவு விளம்பரங்களை தாங்கியவையாய் இலாபநோக்கத்தைக் குறிக்கோளாகக் கொண்டவையாக வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இத்தகைய சஞ்சிகைகளை வாசிப்பதனால் ஒரு வகையில் நாம் மோசம் போகின்றோம் என்று கூடக்கூறலாம். ஆகவே பொருத்தமான தரமான சஞ்சிகைகளை தேடிப்பெற்று தெரிவு செய்து பயனடைய வேண்டியவர்களாக வாசகர்கள் காணப்படுகின்றனர்.

மலர் வெளியீட்டின் பொழுது
ஆசிரியர் ஆ. சிவநாதன் அவர்கள்

---

இன்பமும் துன்பமும் ஞானிக்கு இல்லை.

# ஸ்ரீ முருக மந்திரம்

## துதியா விரதா சுரபூபதியே !

() சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் ()



ஒவ்வொரு மனிதனிடமும் தெய்வீகம் இயற்கையாகவே குடி கொண்டு இருக்கிறது. எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந் திருக்கும் இறைவன் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருக்கிறான். அண்டசராசரமெல்லாம் வியா பித்திருக்கும் இறைவனைப்பிண் டமாகிய உடலின் உள்ளே யோகி களும் ஞானிகளும் தரிசித்தார் கள். இறையின்பத்தில் திளைத் திருக்கின்ற அருளாளர்களின் ஆன்மா முழுவதும் சிவமணம் வியாபித்திருக்கும். நறுமணம் உள்ள பூவிலிருந்து அதன் வாச னையைப் பிரிக்க முடியாதது போல தெய்வத்தின் திருவருள் பெற்ற சிவனடியார்களின் சீவன் முழுவதும் சிவமணம் வீசும் என் பதைப் ''பூவினிற் கந்தம் பொருந்தியவாறு போற் சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது'' எனத் தமிழ் மந்திரமாகிய திரு மந்திரம் குறிப்பிடுகிறது. ஒவ் வொருவருக்குள்ளேயும் ஆழமா கப் பதிந்திருக்கின்ற இறைத்தன் மையை மனிதர்களிற் பலர் அறி யாமல் தவிக்கிறார்கள். மன அழுக்குக்கள் இறைவனின் சைதன்யத் தன்மையை உணர விடாமல் ஒவ்வொருவரையும் தடுத்து விடுகின்றன. காமம், குரோதம், பொறாமை, பேராசை, அகங்காரம், சுயநலம்

புத்திசாலித்தனம் தாயிடமிருந்து வருகிறது.

போன்ற அழுக்குகள் ஆன்மா தெய்வ தரிசனத்தைப் பெறுவதைத்தடுத்து விடுகின்றன. புகை மண்டலத்துக்குள்ளே நெருப்பு இருந்தாலும் நெருப்பைக் காண முடியாமற் புகை மறைத்து விடுகிறது. அதுபோல இறைவன் நமக்குள்ளே இருந்தாலும் நம்முடைய மனத்திற் பதிந்துவிட்ட அழுக்கு அவனைக்காண முடியாமற் செய்து விடுகிறது. மனித உணர்வு குன்றி, மிருக உணர்வுக்கு நாம் தள்ளப்பட்டு விடுவதால் துயரங்களும் துன்பங்களும் நமக்குத் தொடர்கதையாக ஏற்பட்டு வருகின்றன.

மனம் தூய்மைப்படும் போது தான் மனிதன் தெய்வீக நிலை பெறுகிறான். ஆனால், பிறப்பெடுக்கும் மனிதன்பலவித ஆசாபாசங்களுக்குள்ளாகி மனத்தை கறைப்படுத்திக் கொண்டு விடுகிறான். ஐம்புலன்களின் மூலம் எத்தனையோ இன்பங்களை நுகர்கிறோம். இந்த இன்பங்கள் ஆசைகளை அதிகரித்துக் கொண்டே செல்லுகின்றன. மனைவி, மக்கள் என்ற உயிர்ப் பற்றிலும், செல்வம் ஆகிய பொருட்பற்றிலும் ஈடுபட்டு மனிதன் சதா அலைந்து கொணடே இருக்கிறான்.

வானளாவிய மரங்கள் செறிந்த விந்திய மலைக்காட்டுக்குள்ளே சென்றவர்கள் திரும்பிவர வழி தெரியாது திகைத்து வாடி வருந்துவார்கள். இதேபோன்று குடும்ப வாழ்விற் சிக்கிய பலரும் தவிப்பதுண்டு.

'' ஆப்பில் அகப்பட்ட குரங்குபோல அகப்பட்டீர் அகப்பட்டீர்
கிடந்துழல அகப்பட்டீரே ''

எனப் பட்டினத்தார் சம்சாரசாகரத்திற் சிக்கித் தடுமாறுபவர்களின் பரிதாபகரமான நிலையைச் சித்திரிக்கிறார். உலகப் பற்றுக்களை விட்டாலன்றி இறையருளைப் பெறமுடியாது. ஆன்மா இறைவனோடு இணையும் அநுபூதி நிலையை அடைய முடியாது. வாழ்நாளை வீழ்நாளாக்கிக் '' கண்டதே காட்சி கொண்டதே கோலம் '' என வாழ்வதால் யாது பயன்? இதனைச் சந்தத் தமிழ் ஆகிய திருப்புகழில் அருணகிரிநாதர்

'' மனைமக்கள் சுற்றமெனும் மாயா
வலையைக் கடக்க அறியாத
வினையிற் செருக்கி அடி நாயேன்
விழலுக் கிறைத்து விடலாமோ ''

எனக்குறிப்பிடுகிறார்.

அகந்தையைத் துறந்தால் அருளைப் பெறலாம்.

அருட்சோதிப் பிழம்பாய்ச் சிவனது நெற்றிக்கண்ணிலிருந்து தோற்றம் பெற்ற அருட்சுடர்களைக் கங்கை ஏந்திவந்து சரவணப் பொய்கையிற் சேர்த்தாள். தேவர்கள் கேட்டுக் கொண்ட வரத்தின்படி சிவபெருமானிடத்தில் உதித்தவராகிய முருகப்பெருமான் அடியார்கள் கேட்கும் வரங்களை எல்லாம் வாரிவழங்குவார். கருணைக்கு உறைவிடமான கருணாகரனாக முருகப்பெருமான் காட்சி தருகிறார். மனத்தில் துயரைத் தருகின்ற மனைவி, செல்வம் என்கின்ற அச்சத்தைத் தரும் சூழலிலிருந்து அடியேன் நீங்குவதற்கு வழிகாட்ட வேண்டுமென்று அருணகிரியார் கந்தவேட் பெருமானைப் பிரார்த்திப்பதைப் பின்வரும் அநுபூதிப் பாடல் விளக்குகிறது.

'' சிந்தாகுல இல்லொடு செல்வமெனும்
விந்தாடவி என்று விடப்பெறுவேன்
மந்தாகினி தந்த வரோதயனே
கந்தா முருகா கருணாகரனே ''

காம நோய்க்கு உட்பட்டவர் ஒருபொழுதும் பரமனை அடையார். மன்மத தஹனம் செய்தவர்களே ஈசனை அடைவார்கள். வெள்ளையான பற்களும், சிவந்த உதடும், கருங்குவளை மலரையொத்த கண்களும் உடைய பெண்களின் வலையிற் சிக்கித் தடுமாறாமல் இருக்க வேண்டுமெனத் தனது மனத்திற்கு மணிவாசகனார் உபதேசம் செய்வதைப் பின்வரும் திருவாசகப் பாடல் எடுத்து விளக்குகிறது.

'' வேனில் வேள் மலர்க்கணைக்கும் வெள்நகை செவ்வாய்க்கரிய
பானல் ஆர் கண்ணியர்க்கும் பதைத்து உருகும் பாழ்நெஞ்சே
ஊன் எலாம் நின்று உருகப் புகுந்து ஆண்டான் இன்றுபோய்
வான் உளான் காணாய் நீ மாளா வாழ்கின்றாய் ''

குலமகள் தனது கணவர் ஒருவரையே தெய்வமாகக் கொண்டு வாழ்நாள் முழுவதும் பதிவிரதத்தன்மை பூண்டு வாழ்ந்து வருவாள். ஆனால்விலைமகளோ தனது மாயாஜால வித்தைகளைக் காட்டிப் பல ஆடவர்களைத் தன்பக்கம் மயக்கி விடுவாள். காசிப முனிவர் மாயையிடம் மயங்கியதையும், தொண்டரடிப் பொடியாழ்வார் தேவதேவி என்ற தாசியின் வலையிற் சிக்கியதையும் நாம் அவர்களுடைய வரலாற்றிலிருந்து அறிகிறோம். விலைமகளிரது கண்கள் எத்தகைய உறுதியையுடையோர் மனத்தையும் வளைத்துப் பிடித்துப் பதைபதைக்கச் செய்துவிடும்.

[தொடரும்...

நன்றாக எழுதுவதைப் போன்றதே நேர்மை.



யாழ் / தொண்டைமானாறு

## ஸ்ரீ செல்வச்சந்நிதிக் கந்தன்

# திருத்தல புராணம்

சி. விநாசித்தம்பிப்புலவர் அவர்கள்

தொடர்ச்சி ...

அன்பரின் றுணைவா போற்றி ஆறுமா முகனே போற்றி
துன்பினைத் துடைக்க வந்த சோதியே சுடரே போற்றி
வன்பவப் பிணிய றுக்கும் வள்ளலே போற்றி வீரப்
பொன்பயில் வேல்பி டித்த புண்ணியா போற்றி போற்றி. 20

கொள்ளுசெந் தினையின் வள்ளி குஞ்சரி கணவா போற்றி
தெள்ளுசெந் தமிழ்சு ரந்த திருமுரு கையா போற்றி
நள்ளிருட் கூத்த னார்க்கு ஞானமந் திரமு ரைத்த
பிள்ளையே போற்றி பாடற் பிரியனே போற்றி போற்றி. 21

ஓமெனும் பொருளே போற்றி உண்ணெகிழ் அமரர் பூண்ட
தீமைக ளகற்ற வந்த செல்வனே போற்றி கந்த
நாமனே போற்றி யின்ப நலக்கதிர் காம மென்னும்
ஏமகூ டத்திற் கேகும் எந்தையே போற்றி போற்றி. 22

இவ்வண்ண மிமையோர் வேண்ட இளநகை வதனங் காட்டி
மைவண்ண மகுடங் காட்டி மணிக்குழை யசைத்துக் காட்டி
கைவண்ண வடிவேல் காட்டிக் கண்மலர்க் கருணை காட்டி
செவ்வண்ணப் பாதம் காட்டிச் சிவமகன் அருள்புரிந்தான். 23

## தேவர் வரம் வேண்டு படலம்

பூசனை ஏற்ற கந்தன் புண்ணிய கமல பாத
வாசனை பரிம ளிக்க வானவர் முனிவர் நோக்கித்
தேசினை விளங்கு ஞான செல்வனே யீண்டு நங்கள்
மாசினை விலக்கி வேண்டும் வரமளித் திருத்தி யென்றார். 24

தென்பதிக் கதிர காமத் திருத்தலத் திருந்து சூரன்
தன்பதி மகேந்தி ரத்தைச் சமரிடு முனம்வ டக்கு
வன்பதி சிங்க சூரை வயங்கொள வாய்க்கு மிந்த
முன்பதி யாகு மென்றோ முருகனும் முறுவல் பூத்து. 25

[ தொடரும் ...

மனிதனைக் கெடுப்பது ஆசை கோபம்.

உ

# "ஞானச்சுடர்" வாசகர் போட்டி

## வினாக்களுக்கான விடைகள்

1. அநசூயா — (வைகாசி, 2000)
2. ஹோமப்புகை — (வைகாசி, 2000)
3. பயற்றம் துவையலும் இளநீரும் — (வைகாசி 2000)
4. கார்த்திகேய பகவான் — (தை, 2000)
5. மகாமிருத்யுஞ்ஜய மந்திரம் — (தை, 2000)
6. மாண்டவ்யர் — (தை, 2000)
7. சேவல் — நாதம் மயில் — விந்து
   வேல் — ஞானம் (மாசி, 2000)
8. சிவஞானப்பிரதாயி — (பங்குனி, 2000)
9. நாகபாம்பினிடமாக — (பங்குனி, 2000)
10. தௌமியமுனிவர் — (பங்குனி, 2000)
11. வைத்தியகலாநிதி சி. கதிரைவேற்பிள்ளை — (சித்திரை, 2000)
12. யோகர்சுவாமிகள் — (சித்திரை, 2000)
13. வாயுபகவான் — (சித்திரை, 2000)
14. வைரவப்பெருமான் — (சித்திரை' 2000)
15. உலூபி — (ஆனி, 2000)
16. நரக உலகத்தில் அவனது ஊனை அறுத்து அவனுக்கே கொடுத்து உண்ணச் செய்வர். — (ஆனி, 2000)
17. கருணாகரனுக்கு — (ஆடி, 2000)
18. கால்நடை, மனநடை, நாநடை — (ஆடி, 2000)
19. மேலான தவம் — மனவலிமை
    மேலான மகிழ்ச்சி — திருப்தி
    மேலான புண்ணியம் — கருணை — (ஆடி, 2000)
20. அருணகிரிநாதர் — (ஆவணி, 2000)
21. சைவசித்தாந்தம் — (ஆவணி, 2000)
22. 'அகர உயிர்போல் அறிவாகி எங்கும் நிகரில் இறை நிற்கும் நிறைந்து' — (புரட்டாதி, 2000)
23. பாலில் நெய் இருப்பது போலவும் தீபத்தின் நாக்கானது எப்புறம் நோக்குவது போலவும் உள்ளமை — (ஆனி, 2000)
24. ஐவரசு என்னும் சாது — (ஐப்பசி, 2000)
25. சிவபோதம் — (ஐப்பசி, 2000)

நன்மை என்பது செயலில் காணும் அன்பு.



# பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் திருவாய்மலர்ந்து அருளியவை

## நன்னம்பிக்கை, பக்தி, சரணாகதி

திருமதி செ. அருளானந்தம்

ஆத்மஞானத்துக்கு ஞான சாதனைகள் மிகவும் அவசியம். ஆனால், விசுவாசம் பூரணமாக இருந்தால், சிறிது அப்பியாசமே போதுமானதாக இருக்கும்.

ஒருசமயம் வியாசர் யமுனை நதியைக் கடந்துபோக இருந்தார். அதே தருணத்தில் கோபிகாஸ்திரீகளும் அங்கு வந்தனர். ஆனால் ஓடக்காரன் ஒருவனுமில்லை. ஆதலால் அவர்கள் வியாசரை நோக்கி "சுவாமி! இப்போது என்ன செய்கிறது?" என்று கேட்டனர்; அதற்கு வியாசர், விசாரப் படவேண்டாம். நான் உங்களை அக்கரைக்கு அழைத்துச் செல்கிறேன். ஆனால், எனக்குப் பசியாக இருக்கிறது. உங்களிடம் ஏதாவது தின்பண்டம் இருக்கிறதா?" என்று கேட்டார். கோபிகாஸ்திரீகள், தாங்கள் வைத்திருந்த பால், வெண்ணெய் எல்லாவற்றையும் கொடுக்க, வியாசர் அவைகளை வாங்கிப் புசித்தார். பிறகு கோபிகள் "ஆற்றைக் கடப்பது எப்படி?" என்று கேட்க, வியாசர் ஆற்றங்கரையில் நின்றுகொண்டு, "யமுனாதேவீ! நான் இன்று உபவாசமிருப்பது மெய்யானால் நீ எங்களுக்கு வழி விடவேண்டும்" நாங்கள் ஆற்றைக்கடந்து அக்கரைபோய்ச் சேருகிறோம் என்று பிரார்த்தித்தார். அப்படிப் பிரார்த்தித்தவுடன், யமுனை நதியின் ஜலத்தில் ஒரு பிளவு உண்டாகியது; தரை தெரிந்தது. கோபிகளுக்கு அதியாச்சரியமுண்டாயிற்று. அவர்கள் கொடுத்த பால் முதலியவற்றை வியாசர் வாங்கிப் புசித்திருக்க, அவர், "இன்று உபவாசம் இருப்பது மெய்யானால்" என எப்படிச் சொல்லக்கூடும் என்று அவர்கள் நினைத்தனர். அந்தப் பண்டங்களைப் புசித்தது அந்தர்யாமியான ஈசுவரனே தவிர வியாசரல்லர். இந்த விஷயத்தில் வியா

○ மனநிறைவு என்பது இயற்கையாகவே நம்மிடம் உள்ள செல்வம். ○

சருக்கு இருந்த விசுவாசத்தின் பலத்தினால் அவர் அப்படிச் சபதம் பண்ணினார் என்பதைக் கோபிகாஸ்திரீகள் தெரிந்து கொள்ளவில்லை.

ஒரு கனவான் வீட்டில் ஒரு பிராமணர் பூஜைசெய்து வந்தார். ஒருசமயம் அப்பிராமணர் வெளியூருக்குப் போக நேர்ந்த போது, தம் சிறுமகனிடம் பூஜையை ஒப்புவித்து, " தினந் தோறும் நிவேதனத்தைச் சுவாமி முன்னால் வைத்து, அவருக்கு அமுது செய்துவை " என்று சொல்லிப்போனார். பிதாவின் கட்டளைப்படி நடந்த பையன் நைவேத்தியத்தைச் சுவாமி முன்னால் வைத்து, மௌனமாகக் காத்திருந்தான். ஆனால், சுவாமி பேசவுமில்லை, நைவேத்தியத்தை அமுது செய்யவுமில்லை. பையன் நெடுநேரம்வரை பொறுத்துப்பார்த்தான், பூசாகிருகத்திலிருந்து சுவாமி கீழே இறங்கிவந்து. நைவேத்தியத்தின் முன்னர் உட்கார்ந்து அதனைப் புசிப்பார் என்று அப்பையன் திடமாக நம்பியிருந்தான். ஆதலால், அவன் " சுவாமீ! சீக்கிரம்வந்து சாப்பிடும் எனக்கு நாழிகையாகிறது. என்னால் இனிமேல் காத்துக்கொண்டிருக்க முடியாது " என்றான். அதற்கும் சுவாமி பதில் சொல்லவில்லை. ஆதலால், பையன், " சுவாமி உமக்கு அமுது செய்விக்க வேண்டும் என்று என் பிதா சொல்லிப்போயிருக்கிறார் அப்படியிருக்க, நீர் ஏன் இன்னும் உண்ண வராமலிருக்கிறீர்? என் பிதா கூப்பிட்டால் வந்து அமுது செய்துபோகும் நீர், என்னால் நிவேதனம் செய்யப்பட்டதைப் புஜிக்காமலிருப்பதற்கு நான் என்ன அபராதம் செய்து இருக்கிறேன்." என்று சொல்லி நெடு நேரம் அழுதான். பின்னர் தலையை நிமிர்த்திப் பார்க்கையில், சுவாமி மனிதருபத்தை எடுத்துக்கொண்டு நைவேத்தியத்தைச் சாப்பிடுவதைக் கண்டான்! பூஜை முடிந்ததும் பையன் வெளியில் வந்தான். வீட்டுக்காரர்கள், " பூஜை ஆகிவிட்டால் நைவேத்தியத்தைக் கொண்டு வருகிறதுதானே " என்றனர். " எல்லாவற்றையும் சுவாமி சாப்பிட்டுவிட்டாரே " என்று பையன் பதில் சொன்னான். அவர்கள் ஆச்சரியப்பட்டு பூஜா கிருகத்தினுள் நுழைந்துபார்க்க, நைவேத்தியம் வைக்கப்பட்டிருந்த பாத்திரங்கள் வெறும் பாத்திரங்களாக இருக்கக்கண்டு, பிரமித்து நின்றனர். உண்மையான நம்பிக்கையும் தீவிரமான அவாவும் இப்படிப்பட்ட மகிமையை அளிக்கின்றன.

[தொடரும்

மறந்துவிடாதே...! எல்லாமே இழந்துவிட்டோம் என்ற நிலையில் கூட உன் எதிர்காலம் உன் கையில்தான் உள்ளது.

அன்பற்ற வாழ்க்கை சாவுக்கு ஒப்பாகும்.

ஓம் நமசிவாய



# பதியாகிய சிவன் ஒரு நோக்கு

( செ. கந்தசத்தியதாசன் )

சைவசித்தாந்தம் என்றால் சைவ தத்துவத்தின் முடிந்த முடிவு எனப்படும். கி. பி. 13ம், 14ம், நூற்றாண்டுகளில் தோற்றம் பெற்ற சிவஞானபோதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம், திருவருட் பயன் ...... போன்ற 14 சைவசித்தாந்த சாஸ்திர நூல்களினூடாகவே சைவசித்தாந்த கருத்துக்களை வெளிப்படுத்தி இருக்கக்காண்கின்றோம். மெய்கண்ட தேவரை முதலாகக்கொண்ட புறச்சந்தானச் சாரியாராலும், பிற சிலராலும் சுருதி, யுக்தி, அனுபவம் எனும் அளவைகளைக்கொண்டு பதி, பசு, பாசம் எனும் முப்பொருள்களையும் ஆய்வு செய்திருக்கின்றார்கள்.

அறிவிக்காமலே அறியவல்லது பதி என்றும், அறிவித்தால் அறிவது பசு என்றும், அறிவித்தாலும் அறியமாட்டாது பாசம் என்றும் அழைக்கப்படும். ஆதிசங்கரரைப்போல் அல்லாமல் சைவசித்தாந்தம் முப்பொருட்களையும் உண்மைப்படுத்தி கருத்துக்கூறி இருக்கின்றது. இவற்றில் பதி பற்றிய கருத்துக்களை சுருக்கமாக நோக்குவோம்.

பதியாகிய தலைவன் சிவன் ஆவான். இப்பதியை நித்தியத் தன்மை, சர்வவியாபகத்தன்மை, இலட்சியம், இலக்கணம் எனும் தலைப்புக்களில் நோக்குவோமாயின் பதி பற்றிய கருத்துக்களை தெளிவாக விளங்கிக்கொள்ளலாம்.

சைவசித்தாந்திகளின் கருத்துப்படி பதியாகிய தலைவன் என்றுமே உள்ளது. அனாதியானது, தோற்றமோ, முடிவோ இல்லாதது, அழிவில்லாதது என்ற கருத்தை உமாபதி சிவாச்சாரியார் பின்வரும் திருவருட்பயனூடாக தெளிவுபடுத்துகின்றார். ஏகனாகிய பதி அநேகனாகிய பசுக்கள் இருளாகிய ஆணவமலம் கருமமாகிய கன்மமலம் மாயையாகிய சுத்தமாயை, அசுத்தமாயை ஆகிய இவை ஆறும் அனாதியானவை என உமாபதிசிவாச்சாரியார் கூறுகிறார்.

'' ஏகன் அநேகன் இருள் கருமமாயை இரண்
டாக இவை ஆறாதியில் '' — திருவருட்பயன்.

பதியாகிய சிவனை உலகத்தின் தோற்றக்காரணியாக கொண்டு பானையை கண்ட ஒருவன் அப்பானையை செய்தவன் ஒருவன் இருத்தல் வேண்டும் என சிந்திப்பான். அதே போல் இப்பிரபஞ்சத்தினை காணும் போது இதைப் படைத்தவன் ஒருவன் இருக்க வேண்டும் என்ற சிந்தனை தோன்றுகிறதல்லவா? இதையே சிவஞானபோதம் முதற் சூத்திரம் கூறுகின்றது. அவன் என்றும் அது என்றும் சுட்டப்படும் இவ் உலகமானது ஒரு நாள் தோன்றி சற்றுக்காலம் இயங்கி மீண்டும் ஒரு நாள் ஒடுங்குகிறது. எனவே இதை தோற்றி இயக்கி ஒடுக்கிக்கொள்ள இதற்கு அப்பாற்பட்ட ஒருவன் தேவையே அவனே ஆதியும் அந்தமுமில்லாத சிவன் என சிவஞானபோதம் முதற்சூத்திரம் கூறுகின்றது.

"அவன் அவள் அது எனும் அவை மூவினைமையிற்
தோற்றிய திதியே ஒடுங்கிய மலத்துளதாம்
அந்தமாதி என்மனார் புலவர்."

இக்கருத்தையே சித்தியாரின் முதற்சூத்திர முதல் விருத்தப்பாவும் தெளிவுபடுத்துகிறது.

"ஒருவனோடு ஒருத்தி ஒன்றென்று உரைத்திடும் உலகமெல்லாம்
வருமுறை வந்து நின்று போவதும் ஆதலாலே
தருபவன் ஒருவன் வேண்டும். தான் முதல் ஈறுமாகி
மருவிடும் அநாதி முத்த சித்துரு மன்னி நின்றே."

மண்ணை முதற் காரணியாகவும் திருகையை துணைக்காரணியாகவும் குயவன் நிமித்த காரணனாகவும் நின்று பானையைச் செய்வது போல, மாயையை முதற் காரணமாகக் கொண்டு திரோதான சக்தியை துணைக்காரணியாகக் கொண்டு தான் நிமித்த காரணனாகி தனு, கரண, புவன, போகத்தினை படைக்கின்றான்.

இது மட்டுமன்றி தொழிற்பாட்டு காரணியாகவும் பதியை நித்தியப்படுத்தும்போது குடைச்சீலை, கம்பி, பிடி, நூல் என்பன ஒன்றாக இருந்துவிட்டால் குடை வரமாட்டாது. அதை சேர்த்துக் கட்டுவதற்கு ஒருவன் தேவையல்லவா. அதேபோல் பஞ்சபூதங்களையும் தொழிற்படுத்தி இப்பிரபஞ்சத்தை இயக்குவதற்கு இறைவன் தேவை. எனவே பதி என்றுமுள்ளது.

[ தொடரும்......

எதையும் இறுதிவரை முயன்று செய்ய வேண்டும்.

# பங்குனி மாத வாராந்த நிகழ்வுகள்

02 - 03 - 2001 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை :- திரு. பொ. அருந்தவநாதன்
( விரிவுரையாளர் யாழ் கல்லூரி, வட்டுக்கோட்டை )

சொற்பொழிவு - 'திருமந்திரம்' ( தொடர் )

வழங்குபவர் :- திரு. அ. குமாரவேல்
( விரிவுரையாளர் யாழ் கல்லூரி, வட்டுக்கோட்டை )

---

09 - 03 - 2001 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை :- திரு. சி. சிவராஜன்
( ஆசிரியர், மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பா. )

உரைச்சித்திரம் - 'என்ன புண்ணியம் செய்தனை?'

வழங்குபவர்கள் :- திருமதி கோகிலா மகேந்திரன்
( உதவிக் கல்விப் பணிப்பாளர் வலிகாமவலயம் )

திருமதி பகீரதி கணேசதுரை
( ஆசிரியர், மகாஜனக் கல்லூரி )

---

16 - 03 - 2001 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை :- திரு ச. லலீசன்
( ஆசிரியர், புத்தூர் சோமாஸ்கந்தா )

சொற்பொழிவு - 'இறவாத இன்ப அன்பு'

வழங்குபவர் :- கவிஞர் த. நாகேஸ்வரன் ( ஆசிரியர் )

---

23 - 03 - 2001 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை :- இசைமணி திரு. சி. துரைராசா
( பேரவை உறுப்பினர் )

விடயம் - 'பண்ணிசை'

வழங்குபவர் :- திரு. சி. தில்லைமணி (பக்கவாத்திய சகிதம் )
( நல்லை ஆதீன ஓதுவார் யாழ் மாநகரசபை )

---

30 - 03 - 2001 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

# ஞானச்சுடர் மாத வெளியீடு
# பங்குனி - 2001

வெளியீட்டுரை :- சிவஸ்ரீ கை. நமசிவாயக் குருக்கள்

மதிப்புரை :- திரு. இரா. செல்வவடிவேல்

## வாசகர் போட்டி

முதல் பத்து மலரிலும் (2001 ஜனவரி - ஒக்டோபர்) வெளியிடப்படும் விடயங்களை உள்ளடக்கியதாக வாசகர் இடையே போட்டி ஒன்று நடைபெறவுள்ளது. இப்போட்டியில் வெற்றி பெறுவோருக்கு வழமைபோல பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

போட்டி தொடர்பான விபரங்கள் நவம்பர் மாத இதழில் வெளியிடப்பட்டு போட்டி நடாத்தப்பட்டபின் அது பற்றிய முடிவுகள் 2002 ஜனவரி மலரில் வெளியிடப்படும்.

## அன்பான வேண்டுகோள்

மலருக்குப் பொருத்தமான, தரமான சொந்த ஆக்கங்களை இலகு தமிழில் எழுதி எமக்கு அனுப்பி வைக்குமாறு சமயப் பெரியார்களையும், அறிஞர் பெருமக்களையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மலர்க் குழு :

**சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை.**

செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.